# தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 2 | சென்னை | 15—10—55 | சனிக்கிழமை | இதழ் 18


## ★ கம்பானந்தரின் வம்பானந்தம்! ★


கண்ணதாசன்


கம்பனைப் பற்றியும் அவனது இராமகாதை பற்றியும், தங்கள் கருத்தை முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பலரும் விளக்கமாகப் பலமுறை கூறியுள்ளார்கள்; "விளக்கமாக" என்னும்போது, அந்தக் காவியத்தின் மொத்தக் கருத்தைப் பற்றிய விளக்கத்தை மட்டுமல்ல நான் சொல்லுவது. இன அடிப்படையில் ஆராயப்பட்ட அந்த விளக்கம் போக, இராம காதைக்கு உள்ளேயும் புகுந்து, அந்தத் தாளத்தையும் சந்தத்தையும், அதிலே அடக்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட கருத்துக்களையும் முழுவதும் படித்து, பகுதி பிரித்து, சரியான முடிவெடுத்து, மக்கள் முன்னிலையிலே வைத்திருப்பதையும் சேர்ந்துத்தான் சொல்லுகிறேன்.

அண்ணாவின் 'கம்பரசம்' அன்று படித்தோர்க்கும் — இன்று படிப்போர்க்கும் கம்ப காவியத்தின் வழி தவறிய போக்கினை எடுத்துச் சொன்னதும், சொல்வதும் கண்கூடு. அது கம்பன் மீறிய காவிய வரம்பை, இலக்கியத்திறனாய்வு முறையில் எடுத்துத் தந்ததாகும். இதனை நமது கம்யூனிஸ்டு நண்பர்கள்கூட "இனவெறித் தத்துவப்படி நடத்தப்பட்ட ஆராய்ச்சி"யாகக் கூற முடியாது. கம்பனது முரண்பாட்டினை எடுத்துக் காட்டி, முதற் பகுதியிலே அவனால் உச்சாணிக் கோப்பிலே வைக்கப்பட்ட பாத்திரங்கள், அடுத்த பகுதியில் இழிதகைமையில் தள்ளப்பட்ட செய்திகளையும் காட்டி, அதே நேரத்தில் இது தவறு என்று முடிக்காமல், 'இது இப்படி இருக்கலாமா?' என்று கேள்வியிலேயே நிறுத்தியிருந்தார் அண்ணா. முடிவை, கம்பனின் கால் கழுவுவோருக்கே விட்டிருந்தார். ஒருவர், தாம் நடத்தும் ஆராய்ச்சியில் முடிந்த முடிபாகச் சில உண்மைகளைக் கண்டிருந்தாலொழிய, அவற்றைக் கேள்விக் குறியாக்கி 'மக்களே பதில் சொல்வீர்' என்று மக்கள் முன்னால் வைக்க முடியாது. மேலோட்டமான ஆராய்ச்சிகளுக்கு, ஆராய்பவன், மக்களிடமிருந்து பதிலை எதிர்பார்ப்பானால், அவன் மூக்கு, அந்த ஆராய்ச்சி வெளி வந்த மூன்று நான்கு நாட்களிலேயே உடைந்துவிடும். அண்ணாவின் கம்பரசம், இது இப்படி இருக்கலாமா என்று சராசரி மக்கள், தமிழ்ப் புலவர்கள், அப்போது கம்பனைத் தேடாத கம்யூனிஸ்டு நண்பர்கள் அனைவரையுமே கேட்டது. 'இருக்கலாம்' என்று ஆராய்ந்து சொல்ல எவருக்கும் துணிவில்லை, துணிந்து ஆராய்ச்சி நடத்தியவர்கள் பலர்; அவர்களாலும் சொல்ல முடியவில்லை. காரணம், கம்ப காவியத்தில் அதற்கு இடமில்லை. அண்ணா எடுத்துக்கொண்ட உருவத்தை, எந்த உருவத்தாலும் மறுத்துரைக்க முடியாமல் திணறியவர்களை நானறிவேன், நான் அப்போது ரசிகர் குழாத்தில் இருந்தகாரணத்தால். இத்தனைக்கும் அவர் எடுத்துக்கொண்ட செய்திகள் குறைவுதான். ஆயினும் எத்தனை பாடல்கள் எடுத்துக் கொண்டாரோ, அத்தனைக்கும் யாரும் மறுத்துரைக்க முடியாத ஒரு முடிவினைக் கண்டுசொன்னார். இன்றைக்கும் போத்தாம் போதுவில் "கம்பனைப் பற்றி உனக்கென்ன தெரியும்? நீ என்ன கிழித்து விட்டாய்?" என்று கோடையால் தாக்குண்டவர்கள் போல், நம்மைப் பார்த்து அவர்கள் கேட்க முடிகிறதே தவிர, அந்த ஆராய்ச்சிக்கு ஆராய்ச்சி பூர்வமான பதிலைக் காணோம்.

கம்ப ரசிகர்களே குழப்பமடைந்து 'அதன் கருத்துக்காகப் படிக்க வேண்டாம், கலை நுணுக்கத்திற்காகப்படி' என்று சொல்ல ஆரம்பித்துள்ள நேரத்திலே, 'இல்லை; கருத்துக்காகவும் படி' என்று அழையாத வீட்டிலே நுழைகிறார், கம்யூனிஸ்டு சம்பந்தி. அவர் படிக்கச் சொல்லுகிற அந்தக் கருத்து, நம்மால் மட்டுமல்ல, இனநூல் வல்லார் பலராலும் மறுத்துரைக்கப்பட்ட கருத்தாகும். இராம, இராவணச் சண்டை, ஆரிய திராவிடப் போரே என்பது அத்தகைய அறிஞர்கள் பலரும் எடுத்துத் தந்த முடிவாகும். அதனால்தான் கம்பரசிகர்களே குழப்பம் அடைந்தார்கள் என்பதும் உள்ளங்கை உருளைக் கிழங்கெனத் தெளிவாகும். என்றபோதிலும், வழக்கம் போலவே நாட்டை வாழ்விக்க பிரத்தியட்சக் கண்ணோட்டம் போதும்; இனநூல், மொழி நூல் நிலநூல் தேவையில்லை என்கிற கருத்தில், கம்பராமாயணத்திலும் அந்தப் பிரத்தியட்சக் கண்ணோட்டத்தைப் புகுத்துகிறார் கம்யூனிஸ்டு நண்பர். அப்படித்தான் அந்த ஞானோதயம் எப்போது உண்டாயிற்று என்று பார்த்தால், ஒரு நாலைந்து ஆண்டுகளுக்குள்ளே தான் என்பதும் புலனாகும். போகட்டும்; பன்னிரெண்டு மணிக்கு வந்து படுக்கிறான் என்பதற்காக, ஒருவன் தூங்குவதே தவறென்று கூற முடியாதல்லவா! அது போல, கம்யூனிஸ்டுகளின் சமீப கால ஞானத்தையும் மதித்து பதில் கூறுவோம். 9-10-55ம் தேதிய 'ஜனசக்தி' இதழில் 'கம்பனும் வம்பனும்'- என்ற தலைப்பில், ஐ. மா. பா, என்பவர் '**ஐயோ, அம்மா, அப்பா**' என்று கூப்பாடு போட்டிருக்கிறார். அதிலே அவர், "தி. மு. க.க்கள் ஆராய்ச்சி முறைப்படி பதில் கூறவில்லை" என்று கூறியிருப்பது பொது வாழ்விலே அவர் எவ்வளவு காலம் தூங்கி இருக்கிறார் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. நாம, பதில் சொன்ன நேரங்களிலெல்லாம் ஆராய்ச்சி முறையில்தான் சொல்லியிருக்கிறோம் என்பதை அந்தக் காணாக் கண்ணினருக்கும், கேளாக் காதினருக்கும் அடித்துச் சொல்ல வேண்டியவர்களாயிருக்கிறோம். தான் கேளாத ஒன்று, உலகம் சொல்லாத ஒன்றெனக் கருதுவோர் விழித்துக்கொண்டு தானிருந்தார்களென்று எப்படிக் கருத முடியும்? அண்ணாவின் இயக்கப் பிரவேசத்திலிருந்து இன்றுவரை நமது ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் இதற்கு மட்டுமல்ல எதற்குமே ஆராய்ச்சி முறையில்தான் பதில் கூறி வந்திருக்கிறோம் என்பது தெரிய வரும்.

முதலில், இனவெறித் தத்துவம் இனவெறித் தத்துவம் என்று நம் கொள்கையைச் சாடுகிறாரே கம்யூனிஸ்டுப் பரமானந்த குருவின் சீடர், அதனை கவனிப்போம்: இன அடிப்படையைப் பற்றிப் பேசுவதைத்தான் அவர் வெறித் தத்துவமாகக் கருதுகிறாரென்றால், அவரது அரசியல் அறிவுக்கு முதலில் நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வோம். ஒரு கட்சி, தன் நாயகத்தின் மக்களுக்கு வாழ்வளிக்க எண்ணும்போது அது தாழ்ந்த விதத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும். நல்ல சிமிண்ட் பூசப்பட்ட தரையிலே தண்ணீர் வியர்க்கிறது என்றால் பிரத்தியட்சக் கண்ணோட்டத்தின்படி அந்தத் தண்ணீரைத் துடைத்துவிட்டால் மட்டும் போதாது. அந்த நிலத்தின் தன்மையை உணர்ந்து தரையை இடித்து விட்டு பிறகு நிலத்தைச் செப்பனிட்டு, அதன் பிறகு புதிதாகக் கட்ட வேண்டும். அடிப்படையையே திருத்தியமைக்கும் இந்தக் கொள்கைதான், மேலெழுப்பட்ட கட்டிடத்தை அப்பழுக்கில்லாமல் வைத்திருக்கும். சருமத்திலே புண் வந்துவிட்டது என்றவுடன் 'ஆகா, புண் வந்துவிட்டதா பிரத்தியட்சக் கண்ணோட்டத்தோடு போடு களிம்பை!' என்று கூறுவது புண்ணைத் தாற்காலிகமாக தீர்க்குமே தவிர முழுதும் குணப்படுத்தாது. புண் வந்த விதம் கண்டு மருந்து போடுவதுதான் அதற்கு ஒரே வழி. வரலாற்று ஆராய்ச்சி செய்து நிகழ்கால மாற்றத்திற்கு வழிதேடுபவர்கள், நோய் வந்தவிதம் கண்டு, பரிகாரம் தேடும் வைத்தியர்கள் போலாவார்கள். இதுதான் அடிப்படையை ஆராய்ந்து அரசியல் கொள்கையை வகுக்கும் தி. மு. கழகத்தின் தத்துவமாகும். இதனை வெறித்தத்துவம் என்கிறார் 'ரஷ்ய மாணவர்'. எந்த வேஷம் போட்டால் கூட்டம் கூடும் என்பதிலேயே கவனம் செலுத்தும் கம்யூனிஸ்டுகள் அடிப்படையையே ஒதுக்கித் தள்ளுவதில் வியப்பில்லை. இந்த சமுதாயத்திற்கு ஏற்றதெனக் கண்டு பிடிக்கப்பட்ட இன அடிப்படைக் கொள்கை, வெறித் தத்துவம் என்று


(10-ம் பக்கம்)


உள்ளே : கண்ணதாசன் எழுதிய 'பூப்பல்லக்கு'

# மோதி உடையும் சீதையின் கற்பு!

**இமயவரம்பன்**

சீதை கற்புடையவளா என்கிற கேள்வி, விரும்பியோ விரும்பாமலோ, விவாதத்திற்கு வந்துவிட்டது. வந்த பிறகு உண்மையறிந்து சொல்ல வேண்டியது ஆராய்ச்சியாளர்கள் கடமை. உண்மை என்பது என்ன? விவரமான ஆராய்ச்சியின் முடிவிலே தட்டுப்படுவது. இந்தக் கட்டுரையில், சீதையின் கற்பு பற்றிய உண்மையைக் கண்டு பிடிக்க விவரமான ஆராய்ச்சி நடத்துகிறார் இமயவரம்பன்.

இந்தப் புனை பெயரிலே ஒளிந்திருக்கும் நண்பர், நாடு நன்கு அறிந்த ஒரு புலவர். இவர்நடத்துகிற இந்த ஆராய்ச்சியின் முடிவு சீதையின் கற்பு துவண்டு போயிருப்பதைக் காட்டுகிறது. 'ஐயோ; கற்பிழந்தவளா?' என்று யாரேனும் குதித்தால் நாமென்ன செய்ய முடியும்! ஆராய்ச்சி சொல்லுகிறது! வான்மீகியையும், கம்பனையும் முழுக்கப் படித்தே புலவர் இதை எழுதுகிறார். படித்துப் பாருங்கள். [ஆ-ர்.]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கும்பகர்ணனின் பேச்சைக் கொண்டு பார்த்தால் அதில் கூட சீதையைக் கவர்ந்து வந்தது குற்றமாகத் தெரியவில்லை ஆனால் இராவணன் கவர்ந்து வந்த முறையில்தான் தவறிருப்பதாகத் தெரி



கிறது. இராமனை உயிரோடு வைத்து விட்டு வந்தால் சீதையின் மனத்தில் ஒரு நம்பிக்கை இருந்து கொண்டுதானிருக்கும். சீதையை மீட்க இராமன் என்றுவது ஒரு நாள் வரத்தான் செய்வான். அந்த முயற்சியையும், அதற்கான எதிர்ப்புச் சக்தியையும் இராவணன் எதிர்த்தே தீரவேண்டும். இராமனைக் கொன்று சீதை கொண்டு வரப்பட்டிருந்தால், சீதை இராமனை ஒரு வேளை மறந்து இராவணன் வழிச் சேர்ந்திருக்கலாம். அப்படியானால் கும்பகர்ணனின் பேச்சும் முக்கியத்துவம் வாய்ந்ததேயாகும்.

இராவணன் மற்றொரு அமைச்சனின் ஆலோசனையை நாடுகிறான். இராவணனுக்கேற்றபடி போக்கறிந்து பேசும் அவ்வமைச்சன் பேசத் தொடங்குகிறான். அவன் தான் மகா பார்ச்சுவன்.

"இத்துணை தொல்லைகளுக்கிடையில் சீதையைக் கொண்டு வந்தும் இன்னும் துய்த்து மகிழாமல் இருக்கின்றீர்களே எனபதுதான் எனக்கு வருத்தம். கொடிய விலங்குகளும் பாம்புகளும் உகளும் வனத்தில் புகுந்த பிறகு ஒருவன் அங்கிருக்கும் தேனைக் குடித்து மகிழாமல் திரும்பலாமா? அப்படித் திரும்பு வானுயின் அவன் அறியாமையைத் தான் என்னென்பது!

பகைவர்களிருக்கையில் பழிதரும் செயலொன்றை எங்ஙனம் செய்வேன் என்று தயங்குகிறீர்களா? ஒன்றையும் நினைக்க வேண்டாம். துணிந்து இறங்குங்கள். எல்லோருக்கும் தலைவரான தங்கட்கும் ஒரு தலைமை உண்டோ, ஆகையால் அதர்மத்திற்குப் பயப்படாமல் சீதையைத் தங்கள் விருப்பம் போல் ஆக்கி நலம் பெறுங்கள். சீதை தங்களை வெறுத்து விலகினால் கோழிகளைப்போல வஞ்சித்து பலாத்காரமாக மருவிச்சுகம் பெறுங்கள்" என்று கூறி முடித்தான். மகா பார்ச்சுவனின் அறிவுரை பொதுவாகச் சிறந்த தென்று சொல்லத் துணிய மாட்டேன், அரசர்களின் வழியும் அறமும் தனிப்பட்டதல்லவா? பொருளை கையை விட்டு நழுவும்போது அனுபவித்தோம் என்று வது இருக்கட்டுமே" என்ற போக்கில பார்ச்சுவனின் யோசனை செல்கிறது.

அரசர்களின் வழியிலே இராவணனின் செயலோ மகா பார்ச்சுவனின் ஆலோசனை யோ புதுமையன்று. என்ன இருப்பினும் அந்தச் சமயமறிந்து தன்னைப் பாங்கிற்கேற்ப மகா பார்ச்சுவன் பேசியதால் இராவணன்மெச்சுகிறான். ஆரவாரத்தோடு தட்டிக் கொடுக்கிறான். ஆனால் அவன் யோசனையைத்தன்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதைப் புலப் படுத்துகிறான் இராவணன். அப்

பொழுதுதான் அவன் சாப வரலாறு வெளியிடப்படுகிறது.

"மகா பார்ச்சுவ பஹூ காலத்திற்கு முன் ஒன்று நடந்தது. அதை நான் யாருக்கும் வெளிப்படுத்தவில்லை. சொல்லுகிறேன் கேள். ஒரு சமயம் புஞ்சி கஸ்தலை என்ற வானுலகப் பெண் பிரமாவை வழிபட பிரம்மலோகத்திற்குச் சென்றாள், வானில் முகில்களுக்கிடையே நெருப்புக் கொழுந்து போல் மறைந்து மறைந்து சென்ற அழகியைக் கண்டேன். நான் என் வயமிழந்து காமம் மீறி அவளைப் பின் தொடர்ந்தேன். வலியப்பற்றி இறுகப் பிடித்து ஆடை முற்றிலும் களைந்தேன், அவளை நான் போக விடும்போது மதயானையால் மிதிக்கப்பட்ட தாமரைப் பூவைப் போல் வாடியிருந்தாள். பிரம்மன் அவளுக்குத் தோன்றிய இழிவைக் கண்டு கோபமுற்று என்னைச் சபித்தான். 'இந்தப் பொழுது முதல் பிற பெண்களை வலியப்பற்றித் தீண்டினால் உன் தலை ஆயிரம் துண்டுகளாக வெடித்து இறக்கக் கடவை' என்ற சாபம் என்னைக் கட்டுப்படுத்தியது." என்று இராவணன் கூறி முடித்தான்.

இவ்வாறு குறிப்பிடும் வான்மீகி இந்தக் கட்டத்தைத் தாம் உணர்ந்து எழுதியிருப்பாராயின் சீதையை இராவணன் தூக்கும் போது அவன் தலை சுக்கு நூறாகச் சிதறிவிட்டதாக அல்லவா சித்திரிக்க வேண்டும்! அப்படியின்றி இராவணன் தூக்கிய முறையைப் பல இடங்களிலும் குறிப்பிடுவானேன்? விரும்பாத மகளிரைத் தீண்டின் தலை வெடித்து இறக்கக் கடவை என்ற சாபம் சீதையைத் தீண்டும் போது ஏன் வந்துதவவில்லை?

இது சற்று அமைதியோடு சிந்திக்க வேண்டிய விஷயம். வான்மீகி ராமாயணம் முரண்படுகிறதே; வான்மீகியின் கவிதா மேதையில் குறை தோன்றுகிறதே என்று கம்பன் கனைத்திருக்கலாம். இராவணன் தூக்கும் கட்டமும் இராவணனின் சாபமும் ஒன்றுக் கொன்று ஒட்டாமல் நிற்பதை நினைத்திருக்கலாம். ஒட்டாத இரண்டு விஷயங்களைத் தாம் ஒட்ட வைத்துப் பார்க்கலாமே என்று முயன்றிருக்கலாம்.

மேலே சொல்லப்பட்ட சாபம் இடைச் செருகலாகவே இருக்க வேண்டும். இடைச் செருகலாயினும் அதுகம்பன் காலத்துக்கு முன்னமேயே வழக்காற்றில் இடம் பெற்றதாதல் வேண்டும். வான்மீகியே எழுதியிருப்பினும் பின்னோர் செருகியிருப்பினும் அதைப் பற்றிக்கவலையில்லை. அச்சாபத்துக்குச் செய்து கொள்ளும் பொருள் முறையைப் பொறுத்துச் சிக்கல் தீர்ந்துவிடலாம். "வலியத் தீண்டுவது" என்பதற்கு "வலியப் பற்றி மெய்யுறு புணர்ச்சி கொள்வது" என்று சில பண்டிதர்கள் கொள்வதுபோல் பொருள் கொண்டால் தூக்கும் கட்டத்தில் இராவணன் பிழைக்க வழியுண்டு. வான்மீகியின் கவிதா மேதைக்கும் குறையில்லை. சீதையின் உடலைச் சுண்டு விரலால் கூட அரக்கன் தீண்டக் கூடாது என்ற அளவுக்குக் கம்பன் மிகக் கண்டிப்பான முறையில் பொருள் விரித்துக் கொண்டான். அவ்வாறு கம்பன் வியாக்யானம் செய்து கொண்டு இடர்ப்பட்டிருக்க வேண்டியதில்லை,

சில தமிழன்பர்கள் கூறுவது போல கம்பன் தமிழ் மரபு காக்கக் கருதி அவ்வாறு எழுதியிருப்பானே என்னவோ!

தமிழ் மரபு!

புதியதொரு பேச்சு. வியப்பான வேடிக்கை!

"வட நாட்டு இராம காதைக்குத் தமிழ் நாட்டு மரபா தேவை? பெண்டாட்டியைப் பறி கொடுத்த பெருமான் திருக்கதைக்குத் தமிழ் மரபு வேறு வேண்டிக் கிடக்கிறதோ"! என்று தோழர்கள் குறும்பாகச் சிரித்துக்கொண்டு பேசுவது என் காதில் விழாமல் இல்லை.

சீதையை நெருங்கினால் அவளது கற்புக் கனல் எரித்துச் சாம்பலாக்கி விடும் என்ற பேச்சுக்கும் முன்னரே பீடிகையான உறுதி தேடி வைத்தான் கம்பன். 'இராவணனே சீதையைத் தொட்டுத் தூக்குமானு அனுமதித்து அவளைத் தன் ஆசை நிறைந்த கண்களால் அள்ளிப் பருகக் கம்பன் விட்டிருந்தால் சீதையின் 'கற்புக் கனல்' பொய்யாகி விடுவதைக் கம்பன் அறிந்தான். தூக்கும்போது எரிக்காத நெருப்பு இராவணன் துய்க்கும் போதா எரித்து விடப் போகிறது? எனவே தூக்கும் போது சீதையை இராவணன் தொட்டு விடாதபடி மிகக் கவனமாகக் கம்பன் பார்த்துக் கொள்ளுகிறான்.

கதையை மாற்றிக் கம்பன் சீதையின் கற்பைக் காத்தான்.

இராமனைப் பார்த்து, "அப்பா இராமா சீதை நெருப்பிலே இறங்கியபோது நெஞ்சம் பதருமல்; நிலை கலங்காமல், ஓடித் தடுக்காமல் நின்றாயே! ஏன்அப்படி நின்றாய்?" என்று நாம் கேட்டால் இராமனின்



விடையை வான்மீகி ராமாயணத்தில் காண்கின்றோம்.

"மூன்று லோகத்திலும் உள்ளவர்களுக்கு நம்பிக்கை உண்டாகவும் இவளுடைய நிஜ ஸ்வரூபத்தை வெளியிடவும் பிறர் நடக்க வேண்டிய வழியைக் காட்டவும் இவள் அக்னி பிரவேசம் செய்தபோது அலட்சியமாக இருந்தேன்."

— யுத்த காண்டம் - வான்மீகி

இராமனின் இந்த 'வாக்குமூல'த்தைஏற்றுக்கொண்டால் எல்லாம் வெறும் நாடகம் தானா? என்று வியப்படைகிறோம்.

நாடகமும் தோல்வியடைந்ததாகவே சொல்ல வேண்டும்.

மூன்று லோகத்திலும் உள்ளவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டதா?

தேவலோகத்தில் நம்பிக்கை உண்டாகியிருக்கலாம். சீதை குற்றமில்லாதவள் என்று தேவர்கள் தெளிந்திருக்கலாம். ஏனென்றால் இராமனையே மாற்றி அவ்வாறு நம்பச் செய்தவர்கள் தேவர்கள் தானே. பாதாளலோகத்தாரும் நம்பியிருக்கலாம். ஆனால் பூலோக

(11-ம் பக்கம் பார்க்க)

## கம்பன் தீட்டிய காவியம் கம்பனையே சாடுகிறது!

# மாணவச் செல்வத்தை அடித்தனர்!

## ★ ஆணவக்காரர்கள் நடத்திய 'ஆகஸ்டு வேலை'!

## ★ காரைக்குடியில் காங்கிரசாரின் காலித்தனம்!

மாணவர்களை அவமதிப்பதும், கீழ்த்தரமாக ஏசுவதும், தாக்குவதும், சுட்டுக்கொல்வதும் காங்கிரஸ்காரர்களுக்குச் சர்வசாதாரணமான காரியங்களாக ஆகிவிட்டன. உலகத்து நாடுகளில் எதிலுமே இல்லாத இந்தக் கீழ்த்தரச் செய்கை, அகில உலக ஜோதி—மனிதருள் மாணிக்கம்—சமாதானப் புரு பண்டித நேருவின் தலைமையில் இயங்கும் இந்தியத் துணைக்கண்டத்தில் மட்டும் நடந்துவருகிறது. மேற்கத்திய நாடுகளில், கல்லூரிகளில் போய்ப் பேசுகிற பெரும் பெரும் அரசியல் தலைவர்கள்கூட, தங்களை வெகுவாகக் கட்டுப்படுத்திக்கொண்டு பேசுகிறார்கள் என்கிற செய்தியைக் கேள்விப்படுகிறோம். கல்லூரி மாணவர்களின் கருத்துக்களுக்கு அங்கே முதலிடம் தரப்படுவதைப் பார்க்கிறோம். பண்டிதர் போய்ச் சுற்றிப் பார்த்து, மாலை மரியாதை பெற்றுக்கொண்ட ரஷ்ய நாட்டிலேகூட, பலப்பல கட்டுப்பாடுகளுக்கு இடையிலேயும் மாணவர்களுக்கு மட்டும் சிலபல சுதந்தரங்களை வழங்கியிருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அமெரிக்க மாணவர் ஒருவர், உலகத்தின் வேறொரு பகுதியிலே போய்ப் படிக்க விரும்பினால், அமெரிக்க அரசாங்கம் அவரை அனுப்புகிற வேலையைத் தன் முதற்கடமையாகக் கவனிக்கிறது என்று படிக்கிறோம். அந்த அளவுக்கு யோக்கியதை இந்த நாட்டு ஆட்சியாளர்களுக்கு இல்லாவிட்டாலும், மாணவர்களை அவமானப்படுத்தாமலாவது இருக்கலாம். கல்லூரி மாணவர்கள் ஒவ்வொருவரும் எதிர்காலத்தில் நாட்டு நிர்வாகத்தின் ஒவ்வொரு பிரிவுகளையும் கட்டியாளக்கூடியவர்களாவார்கள். சென்னை மாநிலத்து ஆட்சியிலே இருப்போரிலும், காங்கிரஸ் கட்சியிலே இருப்போரிலும் பெரும் பகுதியினர் கல்வியறிவற்றவர்களாக இருக்கிற காரணத்தால், அறிவுத் துறையிலே முன்னேறுகிற மாணவர்கள் மீது அடிக்கடி காய்ந்து வருகிறார்கள்.

6-10-55ம் தேதியன்று, காரைக்குடியிலே பழனியப்பன் எனப் பெயரிய கல்லூரி மாணவர், சில காலிகளால் செருப்பால் அடிக்கப்பட்டதற்கும் காங்கிரஸ்காரர்களின் தற்குறித்தனமே காரணம். யாரோ ஒரு மூடன், தேசியக்கொடியின் நிழலில், கலாநிகழ்ச்சி என்கிற பெயரில் தப்பும் தவறுமாக உளறினானாம். "நீலகிரி மலை ஏழாயிரம் மைல் உயரம்" என்றானாம். பெரும்பாலான காங்கிரஸ்காரர்களின் வண்டவாளமே அவ்வளவுதான் என்றாலும், அந்தத் தவறைத் திருத்தவேண்டி, அந்த மாணவர் எழுந்து, "அது ஏழாயிரம் மைல் அல்ல; ஏழாயிரம் அடி" என்றாராம். உடனே, காங்கிரஸ் காலிகள் சிலர், 'எங்கள் முட்டாள்தனத்தை ஏன் திருத்துகிறாய்' என்று கூறி, அந்த மாணவரைச் செருப்பால் அடித்தார்களாம். இது சம்பந்தமாக, காரைக்குடி நகரசபைத் தலைவர் கே. ஆர். சுப்பையா, குமாரசாமி, சி. டி. கருப்பையா, ஆகியோர் மீது, காரைக்குடி அழகப்பா கல்லூரி நிறுவனர் டாக்டர் அழகப்பாவும் கல்லூரித் தலைவர் என். என். தம்பி அவர்களும் போலீசில் புகார் செய்திருக்கின்றனராம்.

இந்தச் செய்தியைக் கேள்விப்படும்போது, பகுத்தறிவும் மனிதாபிமானமும் கொண்ட எவரது ரத்தமும் கொதிக்கத்தான் செய்யும். நீலகிரி ஏழாயிரம் மைல்; செக்கோஸ்லோவாக்கியா என்பது 'ஸ்லோ'வாக எண்ணெயாட்டுகிற செக்கு; பிரான்ஸ் என்பது வங்காளக் குடாக்கடலில் அமிழ்ந்துபோன ஒரு தீவு; சிலப்பதிகாரம் பாடியவர் திருப்பதி வெங்கடாசலபதி; பாகிஸ்தான் என்பது பழைய பாக்கிகளை வசூலிக்கிற ஸ்தாபனம்; மானம் என்றால் ஆகாயம்; ரயில் என்பது ஆகாயத்திலே ஓடுவது; விமானம் என்பது தண்டவாளத்திலே நகர்வது என்கிற அளவுக்கு புத்திபடைத்த காங்கிரஸ் காலிகள், அறிவுத் தெளிவுமிக்க கல்லூரி மாணவரைச் செருப்பாலடித்ததில் வியப்பொன்றுமில்லை. திருப்பியடிக்காமல் கண்டன ஊர்வலம் நடத்திய மாணவர்களின் பெருந்தன்மையைப் பாராட்டத்தான் வேண்டும். காரைக்குடி அரசியலிலே, காங்கிரஸ் கயவாளிகள் இதுபோன்ற காலித்தனங்கள் பலவற்றை நடத்தியிருக்கிறார்கள். 1955லும் அது தொடர்வது என்றால், நாட்டு மக்களை இன்னும் அவர்கள் தங்களைப்போன்ற மிருகங்களாகவே கருதுகிறார்கள் என்றுதான் பொருள்.

பாட்னாவிலே சில மாணவச் செல்வங்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, அதைப்பற்றிச், சிறிதும் வருத்தம் தெரிவிக்காத மனிதருள் மாணிக்கம், "தேசியக்கொடியைக் காப்பதற்காக நாடே அழிந்தாலும் கவலையில்லை" என்று கதறிற்று. அந்தத் தேசியக்கொடியின் நிழலிலே இத்தகைய காலித்தனமே காங்கிரஸ் கொள்கையாகச் செயல்படுமானால், அந்தத் தேசியக்கொடியோ, அதன் காரணமாக இந்த நாடோ—பண்டித நேருவின் வாக்குப்படி—அழிந்துபடுமானாலும் கவலையில்லை. மாணவர்களுக்கு இழைக்கப்படுகிற எந்த அவமானமும் மனிதத் தன்மையுடைய எல்லோருக்கும் இழைக்கப்படுகிற அவமானமாகும். அத்தனைபேருக்கும் அவமானம் இழைக்கப்பட்ட பிறகும், அதைச் சகித்துக்கொண்டு இந்த நாடு வாழ்ந்து என்ன காரியத்தைச் சாதித்துக் கிழிக்கப்போகிறது? தோட்டத்தில் பாதி கிணறு என்பதுபோல, இந்த உபகண்டத்தில் இருக்கிற ஜனத்தொகையிலே முக்காலே அரைக்கால் வாசிப்பேர் கல்வியறிவற்றவர்கள். எப்படியாவது இந்தச் சமுதாயம் அறிவுத்துறையிலே தேர்ச்சிபெறவேண்டும் என்பதற்காக, அரசியல் தலைவர்கள் பலரும் பாடுபடுகிறார்கள். மாணவத் தோழர்களும் முண்டியடித்துக்கொண்டு, கல்லூரிகளிலே இடம்பெற்று, மனித சமுதாயத்தை உய்விக்கும் அறிஞர்களாக முயற்சிக்கிறார்கள். இந்த நேரத்தில், முடிந்தவரையிலே அதிகம் கல்லூரிகளைத் திறந்து, மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியதை விட்டுவிட்டு, தொல்லைகளுக்கிடையில் கல்லூரிகளில் சேர்ந்த மாணவச் செல்வங்களை—அவர்கள் நல்லறிவு போதித்தார்கள் என்பதற்காக—செருப்பால் அடிப்பதென்பது அறிவுகெட்ட செயலாகும். அந்த அடி, அந்த மாணவன்மீது மட்டும் விழுந்த அடியல்ல; அந்தக் காலத்திலே எவனோ ஒரு கடவுளின் முதுகிலே விழுந்த அடி நாட்டு மக்கள் எல்லோர்மீதும் விழுந்ததாமே, அதுபோல இதுவும் நாட்டு மக்கள் முதுகில் விழுந்த அடியாகக் கருதப்படவேண்டும். இத்தகைய தரம்கெட்ட செய்கை இனியும் நடைபெறாதவாறு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கொதித்தெழும் சமுதாய மக்களால் நாட்டிலே ரத்த ஆறு ஓடாமல் இருக்கவேண்டுமானால், முன் எச்சரிக்கையாக அரசாங்கமும் போலீசாரும் நடந்துகொள்ள வேண்டியதவசியம்.

குறிப்பாகக் காரைக்குடியைப்பற்றிச் சொல்லப்போனால், அங்கே காங்கிரஸ் கட்சி நாணயங்கெட்டதொரு தொழில் நிறுவனமாக நடந்துகொண்டிருக்கிறது. தேர்தல் அல்லாத காலத்திலும் இந்தத் தொழிலும் பேரமும் நடப்பதைக் காண்கிறோம். "கோவாபரேடிவ் ஸ்டோர்" என்கிற பெயரிலே சிலர் கொள்ளையடிப்பதாகச் சொல்லப்படுவதையும் கேட்கிறோம். அழகப்பா கல்லூரி அங்கு திறக்கப்பட்ட பிறகு, நகரில் ஒரு புதிய களை ஏற்பட்டது. நிலநூல், வரலாறு, இலக்கியம் முதலிய அனைத்தையும் தெருவுக்குத் தெரு விவாத உருவத்தில் கேட்க முடிந்தது—முடிகிறது. கோயில்களிலே பணத்தைக் கொட்டியழாமல், கல்லூரி ஆரம்பித்து வைத்தது மூலம், டாக்டர் அழகப்பா காரைக்குடி நகருக்கும், நாட்டுக்கும் பெருமை தேடித் தந்தார். கல்லூரி திறக்கப்படுவதற்கு முன்னாலே, காங்கிரஸ்காரர்களின் தப்பும் தவறுமான பொருளாதாரப் பேச்சே காரைக்குடி மக்களின் மனதில் ஏற்றப்பட்டுக் கிடந்தது. படித்த ஒரு சிலரும் அதை எதிர்த்துப் பேசப் பயப்பட்டார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் மேடை போட்டால், காங்கிரஸ்காரர்கள் பின்புறமிருந்து தாக்கி 'இராமகாதை' நடத்தினார்கள். அந்த வெறியாட்டம் ஓயவேண்டிய நிலையை அழகப்பா கல்லூரி காரைக்குடியில் ஏற்படுத்தி வைத்தது. இந்த முற்போக்கான நிலையை ஏற்படுத்தி வைத்ததற்காக, டாக்டர் 'அழகப்பாவை' அவரது சமூகத்தாரே பலர்—தாங்கள் மடைமையின் பிடியில் இருப்பதால் — வெறுக்கிறார்கள் என்றால் அந்த நகரம் முன்பிருந்த நிலைமையை ஒருவாறு உணரமுடியும். கல்லூரி திறப்பதற்கு முன்னாலேயெல்லாம் கம்பன் விழா போன்ற சில இலக்கிய விழாக்கள் கூட, தான்தோன்றித்தனமாக நடந்து வந்தன. இப்போது, மாணவர்கள் கேள்வி கேட்பதாலே, கம்பன் விழாக்கள் பயந்தபடியே நடக்கின்றன. இப்படி அந்தகார சூழ்நிலையிலிருந்து காரைக்குடியை மாணவர்கள் ஒளி உலகிற்குக் கொண்டு வருவதால் தங்கள் தொழில் கெடுகிறதே என்று காங்கிரஸ்காரர்கள் ஆத்திரப்படுகிறார்கள். இதுதான் மேற்சொல்லப்பட்ட காலித்தனத்திற்கு அடிப்படையான உண்மையாகும். மாணவர்கள் இனித் தூங்கமாட்டார்கள்! நாடு அறிவுத்துறையிலே முன்னேறுகிறது! பல கலையும் பயில்கிற காரணத்தால் கல்வியறிவற்றவர்களின் பேச்சுக்களை மாணவர்கள் வெறுக்கிறார்கள். அதைத் தடுத்துநிறுத்த ஆசைப்படுகிறார்கள். அதனால் ஆத்திரமடைந்து இத்தகு கேவலச் செய்கைகளில் காங்கிரஸ்காரர்கள் இறங்குகிறார்கள்.

காரைக்குடியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஒருமுகமாக உரத்தகுரல் எழுப்புவதும், இனியும் இதுபோன்ற செய்கைகள் நேருமானால் நாடு கொதித்தெழும் என்று காங்கிரஸ்காரர்களை எச்சரிப்பதும் நாட்டிலுள்ள எல்லா மாணவர்களுக்குமுள்ள கடமை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

**– கண்ணதாசன் –**

எண்ணம்

மலர் 2 | 15—10—55 | இதழ் 18

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தைஎன(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"




# பூப்பல்லக்கு

கண்ணதாசன்

அழகான மாளிகை-பல வர்ணக் கண்ணாடிகள் - அலங்கார முகப்பு - பள பளக்கும் தரை-அதிலே பாதம் போட்டு முன்னேற பட்டுவிரிப்பு—அதற்குள் ஒரு உல்லாச மண்டபம் - மண்டபத்தின் நடுவிலே நாலடி கனமுள்ள பஞ்சணை. அதன் மேல் ஒரு பட்டு விரிப்பு-அதன் மீது மலர்கள்-அந்த மாளிகைமுழுக்க நறுமணம்-அந்த மாளிக்கு உரிமைக்காரி, தன் ஆட்டத்தால் மனித மனத்தை ஆட்டி வைக்கும் நாட்டியக்காரி. மென்மைக்கும் மென்மை சொலும் மெல்லியலாள். கன்னிப் பருவம் கனிந்த புது மலர். அம்பளவு எவ்வளவோ அவ்வளவு விழி, செம்பவளம் எவ்வளவோ அவ்வளவு இதழ், வஞ்சிக் கொம்பளவு எவ்வளவோ, அவ்வளவு இடை, கைச் சொம்பளவு எவ்வளவோ அவ்வளவு தனம். இவ்வளவும் அவ்வழகைப் பிழிந்தெடுத்த சாரம்.

அவள் ஒரு ஆடற்கலையரசி!

சின்னஞ் சிறிய குடிசை. அதிலே ஒரு எண்ணெயில்லாத விளக்கு. தரையினும் கூரையிலும் கரையான்களின் ஆதிக்கம். மூலைக்கு மூலை ஏட்டுக் குவியல்களும் எழுத்தாணிகளும். கடித்துப் போடப்பட்ட சில பழத்துண்டுகள். அணில்களின் கண்ணாமூச்சி விளையாட்டு. பல்லிகளின் பரம்பரைச் சங்கீதம். தொட்ட இடமெல்லாம் தூசு. அதிலே ஒரு மனிதன். வாரி விடப்படாத தலை. வளமிழந்த முகம். வாடிப்போன மேனி. அதிலே மானத்தை மறைக்க ஒரு கந்தை. கண்களில் மட்டும் கோடி நிலவொளி.

அவன் ஒரு ஏழை நடிகன்.

அவளது மாளிகை நகரிலே இருந்தது. அவனது குடிசை காட்டிலே இருந்தது. நடிகன் ஒருநாள் நகருக்குப் போனான். அழகான தெருவிலே அந்த அழகற்றவன் போய்க் கொண்டிருந்தான். வாணிபர்கள் பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். வாங்க வந்தவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆடவரும், பெண்டிரும் முன்னும் பின்னுமாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள். சுருக்கமாக, அந்த நகரம் அழகே உருவாய் விளங்கிற்று.

நடிகன் ஒரு ஓரத்திலே நின்றான். கண்களை மூடிக் கொண்டான்: கைகளைக் காதுகளிலே சேர்த்தான்: பாடினான்: நடித்தான். கற்பனைகளை அள்ளிச் சொரிந்தான்: கவிதைகளை வாரி வீசினான். வெகு நேரம் பாடினான். ஆனால் அந்த நகரத்திலே ஒருவர்கூட அந்தப் பாட்டைக் கேட்கவில்லை. எல்லோரும் தங்கள் வழியே போய்க்கொண்டிருந்தார்கள். அந்தப் பக்கம் ஒரு பல்லக்கு வந்தது. அதைச் சுற்றி ஒரு பெரும் கூட்டம் வந்து கொண்டிருந்தது. அந்தப் பல்லக்கினுள்ளே அந்த நாட்டியக்கார அழகி உட்கார்ந்திருந்தாள். நடிகனின் பாட்டு அவள் காதை மோதியது. தலையைத் திருப்பினாள். "நிறுத்து பல்லக்கை" என்றாள். பல்லக்கு நின்றது. அழகி கீழே இறங்கினாள். கூட்டம் வழி விட்டது. அழகி நடிகனிடம் சென்றாள். "அய்யா" என்றாள். அவன் கண்களைத் திறந்தான். அவள் "என் வீட்டுக்கு வாருங்க" என்றாள். அவள், முன் போனாள். அவன் பின் தொடர்ந்தான். அருகிலிருந்த அவளது மாளிகைக்குள் இருவரும் நுழைந்தார்கள். அழகான கோப்பையிலே அந்த நடிகனுக்கு மது ஊற்றிக் கொடுத்தாள் அழகி. அவன் குடித்தான். காதற் பேச்சுத் தொடுத்தான். கவிதை பல படித்தான். அவள் கனிந்து அவன் மடியில் படுத்தாள். கண் வலை வீசிப் பிடித்தாள். அவள் ஆடினாள்-இவன் பாடினான். பொழுது மெல்ல மெல்லப் போயிற்று. நடிகன் புதுப் பொலிவு பெற்றான். காதலிலும் போதையிலும் புரண்டான். பாடிப் பாடிக் குவித்தான். தங்கள் கலையரசி அந்த நடிகனை மதிப்பதை—காதலிப்பதைக் கண்டார்கள் நகர மக்கள். "நாம் மதிக்கிறோம் கலையரசியை, அவள் மதிக்கிறாள் நடிகனை, ஆகையினால் அந்த நடிகன் உயர்ந்தவனாய்த்தான் இருக்க வேண்டும்" என்று தீர்மானித்தார்கள். அவனை அழைத்தார்கள். பாடச் சொன்னார்கள். கேட்டார்கள். பரவசப் பட்டார்கள். மரியாதை செய்தார்கள். ஆடலழகியின் பூப்பல்லக்கு அவனைத் தூக்கிக்கொண்டு நகர் வலம் வந்தது. ஊரெங்கும் நடிகனின் புகழ். அவன் பெயர் கேட்டாலே கை தட்டினார்கள். நடிகனின் தலை கனத்தது. போதையேறிற்று. பாராட்ட வந்தவர்களோடு போராட்டம் நடத்தினான். மாலை கொண்டு வந்தவர்களை வேலை யாட்களாக எண்ணினான். "வாசலிலே காத்திருக்கச் சொல்! வருகிறேன் கொஞ்சம் நேரங்கழித்து" என்னும் அலட்சியப் பேச்சின் மூலம் தன் பெருமையை நிலை நாட்டத் தொடங்கினான். பகலிலும் அழகியைப் பள்ளியறைக்கு அழைத்தான். "உனக்காக நானல்ல, எனக்காகவே நீ" என்றான். அழகி துடித்தாள்; கலங்கினாள். அறிந்தார்கள் ஊர் மக்கள். ஒருவன் முதலில் வந்தான். "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று அதட்டினான். நடிகன் அலட்சியமாகச் சிரித்தான். பத்துப் பேர் வந்தார்கள். நூறு பேர் வந்தார்கள். நகரே திரண்டு வந்தது. "ஏன் செய்கிறாய்? ஏன் செய்கிறாய்?" என்ற கேள்வி எங்கும் எதிரொலித்தது. நடிகன் எல்லோரையும் அலட்சியமாகப் பார்த்துச் சிரித்தான். கூட்டம் கொதித்தது. அவனைப் பிடித்து வெளியிலே தள்ளியது. அவன் தெருவிலே போய் விழுந்தான். எழுந்தான். பழையபடியும் அந்தக் கூட்டத்தை அலட்சியமாகப் பார்த்தான். "அட பைத்தியக்காரர்களே! என் நடிப்பினாலும் பாட்டினாலும் தானடா நாட்டிலே உங்களுக்கு மரியாதை ஏற்பட்டது? நானில்லையென்றால் உங்கள் கலையரசிக்குக்கூட மதிப்பு ஏதடா?" என்று கத்தினான். பாடினான்: உருக்கமாகப் பாடினான். உணர்ச்சியோடு பாடினான். கூட்டம் ஒரு பல்லக்கைத் தூக்கிக் கொண்டுவந்தது. அதிலே கலையரசி துவண்டு கிடந்தாள். கூட்டம் நடந்து சென்றது. நடிகன் பாடிக்கொண்டே நின்றான் ஆனால், ஒருவர்கூட அந்தப் பக்கம் திரும்பவில்லை. அந்தப் பக்கத்திலே ஒரு வண்ணான் ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டு வந்தான். அதன் முதுகிலே மூட்டை இருந்தது. வண்ணான் மூட்டையைக் கீழே இறக்கினான். கழுதையைக் குளிப்பாட்டினான். நிறையத் தீனி கொடுத்தான். அதன் கழுத்தைக் கட்டித் தழுவியவாறு அருகிலேயே உட்கார்ந்தான்.

நடிகன் இதைக் கண்டான். வண்ணானைப் பார்த்துக் கத்தினான். "அட முட்டாளே அது கழுதையடா, கழுதை! அதை ஏனடா கட்டிக் கொஞ்சுகிறாய்?" என்று கூவினான். வண்ணான் மெல்லத் திரும்பினான். மெதுவாகச் சொன்னான்.

"இது நன்றி மறக்காதது"

நடிகனின் இருதயம் வலித்தது.

---

**கண்ணதாசன்**
**நிகழ்ச்சிகள்**

◉

| | | |
|---|---|---|
| அக் | 16 | காலை-துறையூர் |
| | ,, | மாலை-காரைக்குடி |
| ,, | 18 | மதுரை-அமெரிக்கன் கல்லூரி |
| ,, | 19 | திருப்புவனம் |
| ,, | 20 | திருப்புத்தூர்-அண்ணா கூட்டம் |

---

# நூல் நயம்

## காவியப் பாவை

தென்மொழியாம் தேன்மொழியின்-தமிழ் மொழியின் சிறப்பையும் மேம்பாட்டையும் மறுப்போர்க்கு,—மறந்தோர்க்கு நினைவூட்டும் மலர்க்கொத்து இந்த நூல். கவிஞர் முடியரசன் அவர்களின் பாடல்களைக் கோர்வை செய்து புத்தக வடிவாக்கி காரைக்குடி முத்து நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள்.

நல்ல நல்ல பாடல்கள்,—நம் நெஞ்சைத் தொடும் பாடல்கள் நூலில் நிறைந்து காணப்படுகின்றன.

என்னைப் பழிப்பவனை!—நான்
ஏதும் நினைப்பதில்லை.
உன்னைப்பழிப்பவனை—பகையாய்
உள்ளம் நினைக்குதம்மா—

இது போல உயிருக்கு நேரான தமிழ் மொழியை எண்ணி எழுதப்பட்டிருக்கும் பாடல்கள் படிப்போர் மனதைப் பெரிதும் கவர்கின்றன.

விலை ரூ 1—0—0 - கிடைக்குமிடம். முத்து நிலையம் காரைக்குடி.

◉

## நமது மொழி தமிழ்

தாய் மொழியின் இன்றியமையாமை குறித்து எழுதப்பட்ட சிறு நூல். நூலாசிரியர் புலவர், மருதவாணன் சில ஆதாரங்களைக் காட்டி இந்த நூலை தமிழகத்திற்குப் படைத்திருக்கிறார். தமிழரின் பண்பாட்டை இச் சிறு நூலில் விளக்க நூலாசிரியர் முயன்றிருக்கிறார். நூல் அமைப்பு நன்றாக இருக்கிறது.

கிடைக்குமிடம் : ராஜா பதிப்பகம், பெரிய கடை வீதி, கோவை. விலை ரூ 1—0—0

## துப்பறியும் கதை

தோழர் வாசவன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரும் மாதப் பத்திரிகை இது. இதழ் முழுதும், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் கதைகள் நிறைந்திருக்கின்றன. பத்திரிகைத் தொழிலில் நல்ல அனுபவம் பெற்ற வாசவனுக்கு, 'துப்பறியும் கதை' நல்ல வெற்றியைத் தேடிக் கொடுக்கலாம். தமிழ் நாட்டுக்கு 'துப்பறியும் கதை' புதுமையான பொழுது போக்குப் பத்திரிகை.

துப்பறியும் கதை-விலை எட்டணா. ஆசிரியர் வாசவன், முகவரி - 21 சுங்குராமன் செட்டி தெரு, சென்னை-1.

◉

## பொற்கொடி

சிறு, சிறு நிகழ்ச்சிகளை வைத்து பின்னப்பட்ட குறுநாவல். நூலாசிரியர் விகரு. ராமனாதனுக்கு இது முதல் முயற்சி. நாட்டுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற நோக்கோடு இந்த நூல் வரையப்பட்டிருந்தாலும், வாக்கிய அமைப்பு, சில இடங்களில் குழப்பம் தரக் கூடியதாக அமைந்திருக்கின்றன. எளிதில், அவை, திருத்திக் கொள்ளத் தக்கவைதான். நூலின் முகப்பு நன்றாக அமைந்திருக்கிறது. நடை நன்றாக இருக்கிறது. பன்மொழிப் புலவர் அப்பாதுரை அவர்கள் இந்நூலுக்கு முன்னுரை எழுதியிருக்கிறார்கள்.

விலை ஒரு ரூபாய் - சோமு அலமு பதிப்பகம். 135 மவுண்ட் ரோடு. சென்னை-6 ஆசிரியர் விகரு. ராமனாதன்.

◉

# தேரோட்டம்!

தென்னாட்டிலே தேரோட்ட விழா பெரும் பகுதி இடங்களிலே அறுபது நாட் திருநாள் நடத்தி அதி விமரிசையாக தேரோட்டத்தை நடத்திக் காட்டி விட்டதாக உள்ளூர மகிழ்ந்து உவகையுற்றுக் கொண்டிருக்கிறார்கள் ஊராள வந்திருக்கும் 'உத்தமர்'கள். காப்புக்கட்டு விழாவில் தொடங்கி 'கருட சேவை' வரை நாளுக்கொரு வாகனத்தில் பவனி வந்து, 'அன்ன'த்தில் ஏறி, தமிழ் அகிலமெல்லாம் சுற்றி, இறுதியிலே தேரோட்டம் நடத்திக் காட்டியிருக்கிறார்கள் தேசியத் 'தம்பிரான்'கள். என்ன அந்தத் தேரோட்டம்? காங்கிரஸ் தலைவர்கள் வடம், பிடித்துஇழுத்தார்களா? காமராசரும். கங்கைக்கரை ஐவரும் வடத்திலே நின்று கொண்டு அடி வடத்திலே நிற்கும் அண்ணன் மாரே, நுனி வடத்திலே நிற்கும் நாயன் மாரே' என்று குரலெழுப்பி வெள்ளை வீசினரா? இல்லை; அந்தத் தேரோட்டத்தை யல்ல நாம் குறிப்பிடுவது: அரசியல் தேரோட்டம். நகர சபைகளுக்காக நடத்தப்பட்ட தேர்தல் தேரோட்டம். தென்னாட்டில் பல இடங்களிலே நடந்து முடிந்தது. அந்தத் தேரோட்டத்தைத்தான் நாம குறிப்பிடுகிறோம் — அந்த விழா வெற்றிகரமாக நடத்தப்பட்டு விட்டதாகப் பேசிக் கொள்கிறார்கள்— தங்களுக்குள்ளேயே மகிழ்ந்து கொள்கிறார்கள்—ஒரு சிலர் மார்பினையும் தட்டிக் கொள்கிறார்கள். தேரோட்டம் முடிந்துவிட்டதாம்! உண்மைதான்—தேரோட்டம் முடிந்துவிட்டது; தேர் நிலைக்குச் சேர்ந்துவிட்டது. ஆனால் விழா வெற்றிகரமாக முடிந்ததா? வடமிழுக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் கூடியிருந்து ஒற்றுமையாக வடமிழுத்தனரா?—இல்லை, சந்திக்குச் சந்தி காங்கிரஸ் சப்பரங்கள் நாதியற்றுப் போய்த்தான் பிறகு நிலைக்குச் சேர்ந்திருக்கின்றன.

எந்த மாவட்டத்தில் யார் செல்வாக்கு மிக்கவராகத் 'திகழ்' கிறாரோ அவரிடமே நகர சபைத் தேர்தலுக்கு ஆள் பொறுக்கும் திருப்பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது இன்றைய நிலையில், செல்வாக்கு மிக்க காங்கிரஸ்காரர் என்றால், அவர், அந்த வட்டாரத்தின் தூய்மையான காங்கிரஸ்காரர்களுக்கு நேர் விரோதியாகத் தானிருக்க முடியும். தனக்கு பங்காளிழுப்போரையும் பாதம் தாங்கிகளையும் அடுத்த பொதுத் தேர்தலுக்கு தனக்குழைக்கும் அடியார்களையும்தான் அந்த செல்வாக்குள்ள காங்கிரஸ்காரர் நகர சபைத் தேர்தலுக்கு காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தேர்ந்தெடுத்திருப்பார். இதனால் காங்கிரசுக்குள்ளேயே குழப்பம். ஒரே கொடியின் கீழுள்ளவர்களுக்குள்ளேயே தகராறு—ஒத்துழையாமை முகாம்! 'காந்தியின் மீது எனக்குப் பற்று உண்டு; அவருடைய கொள்கைகளின்பேரில் நான் அபார நம்பிக்கை வைத்திருக்கிறேன்; ஆனாலும் இந்த ஊர் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு ஒத்துழைப்பதைக் காட்டிலும் 'பிள்ளையார் பிறப்பை'ப் பற்றிய ஆராய்ச்சி நடத்தலாம்' — என்றுகூட சில முதிர்ந்த காங்கிரஸ்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது செட்டி நாட்டு வட்டாரத்தில்!

◉

நடந்து கொண்டிருக்கும் இந்தத் தேர்தலிலே ஆட்சியாளர்களை வைத்திருக்கும் குறிபோடும் முறை இருக்கிறதே, அது பற்றிக் கூட சில இடங்களில் கேள்விகள் எழும்பியிருக்கின்றன. குறிபோடும் (—) இந்த முறையை காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கே பெரிதும் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் அபேட்சகர் ஒருவர், முதலில் தன்னை யாரென்று சொல்லிக் கொள்ளாமல்சமுதாயத்தின் அடித்தளத்திலே வதியும் வாக்காளர்களிடம் போய் 'வோட்டு'க் கேட்கிறார்கள். அந்த ஏழைகள் காங்கிரசின் பாலுள்ள வயிற்றெரிச்சலில், 'நாங்கள் மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப்போட மாட்டோம்' என்று சொல்கிறார்கள். அந்த நேரத்தில் 'வோட்டு'க் கேட்கப் போன அந்தக் காங்கிரஸ்காரர், குறிபோடும் (—) இந்த முறையைப் பயன்படுத்திக்கொண்டு, 'ஆமாம் நானும் அதைத்தான் சொல்ல வந்திருக்கிறேன். நீங்கள்மாட்டு சின்னத்தின் மீது—இப்படி ஒரு கோட்டைக் கிழித்து விடுங்கள். நமக்கு எதற்கு அந்த மாட்டுப் பெட்டி?" என்று சொல்லி வருகிறார்கள். கல்வியறிவில்லாத அந்த ஏழைகள், அது போலவே செய்திருக்கிறார்கள்: இதனால் காங்கிரஸ் வெற்றி பெற ஏதுவாகிறது. இதே முறையில் சென்னையில் சில தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றதாகச் சொல்லப்படுகிறது. தேசியத்தாரின் தேர்தல் திருவிளையாடல்களில் இது ஒரு வகை!

◉

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கக்கன் ஒரு சில இடங்களில் தேர்தல் பிரச்சாரம் செய்திருக்கிறார். பேசுகையில் 'காங்கிரசுக்கு, வோட்டுப் போட்டு ஆதரியுங்கள்' என்று பேசியிருந்தாலும் பரவாயில்லை. காந்தியாருக்குக் காணிக்கை செலுத்துவது போல காங்கிரசுக்கு வோட்டுப் போடுங்கள் என்று பேசி வருகிறாராம் இது பற்றி சில காங்கிரஸ் வாதிகள்கூட வருத்தப்பட்டிருக்கிறார்கள். 'கக்கன் ஏன் காந்தியடிகளைப் பற்றிப் பேச வேண்டும்? 'காந்தியாருக்குக் காணிக்கை போல' என்றால் என்ன பொருள்? காங்கிரசுக்கு ஓட்டுப்போட வேண்டாமென்றுதானே கக்கன் சொல்கிறார். ஏனென்றால் காந்தியார் காங்கிரசைக் கலைக்கத் தானே சொன்னார். அதனால் வோட்டர்களெல்லாம் காந்தியாருக்குக் காணிக்கை செலுத்துகிறோம்என்று வேறு பெட்டியில் தானே வாக்கை அளிப்பார்கள்! கக்கன் ஏன் இந்தப் பொல்லாப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்? திண்டுக்கல்லைப் போன்ற இடங்களில் நகரக் காங்கிரசுக்குள்ளேயே இப்படி ஒரு மனஸ்தாபம். ஒதுங்கி நிற்கும் தூய்மையான காங்கிரஸ்காரர்கள் இதைக் கண்டு கை கொட்டிச் சிரிக்கிறார்கள்!

## களம் : 33

**காட்சி :** 33

**இடம் :** கொலைக்களம்

**நேரம் :** பகல்

[கொலைக்களத்தில் பலவகையான கொலை மண்டபங்கள் அமைக்கப்பெற்றிருக்கின்றன. தூக்குமேடை ஒருபுறம்: பலிபீடம் ஒருபுறம் : பள்ளம் ஒருபுறம் எனப் பலவகை. அம்பிகாபதியைப் பள்ளத்திற்குள் இறக்கி, கழுத்தளவிற்கு மண்போட்டு மூடிவிடுகிறார்கள். தலைமட்டும் வெளியிலே இருக்கிறது. யானை ஒன்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. கொலைக்களத்தில் நாடே திரண்டிருக்கிறது. அமராவதி இல்லை. குலோத்துங்கன் 'நடக்கட்டும்' என்று ஆணையிடுகிறான். அம்பிகாபதி சிரித்தவாறு கண்களை மூடிக்கொள்கிறான். யானை, அம்பிகாபதியின் தலையைத் தரையோடு அழுத்திக்கொல்கிறது. ராஜதண்டனை நிறைவேறுகிறது. கம்பன் துடிக்கிறான். ஏகம்பவாணர் மூர்ச்சித்து விழுகிறார். புலவர்கள் கண்ணீர் சொரிகின்றனர். கூத்தன் உட்பட.]

**ஏக :** குலோத்துங்கா! கொன்றுவிட்டாய் அம்பிகாபதியை! என் பிள்ளையைக் கொன்றுவிட்டாய்! நானிருக்கிறேன்! உன்னை விடமாட்டேன்! அணு அணுவாகச் சிதைப்பேன்!

[ஏகம்பவாணர் பெருஞ் சிரிப்புச் சிரிக்கிறார். அவரது மூளை குழம்புகிறது : புத்தி பேதலிக்கிறது. சிரித்துக்கொண்டே ஓடுகிறார். அமராவதி ஓடிவருகிறாள். சிதறிக்கிடக்கும் தலையின் மீது விழுகிறாள். அழுகிறாள்: துடிக்கிறாள். இதயத்துடிப்பு நின்றுவிடுகிறது. குலோத்துங்கன் தன்னையறியாமல் அழுதுவிடுகிறான். கம்பன் மயக்கம்-ஏகம்பவாணரும் பல புலவர்களும் அவனைத் தூக்கிச் செல்லுகின்றனர்.]

—காட்சி முடிவு—

## களம் : 34

திருப்புக்காட்சி 7ன் மீட்சி

**காட்சி :** 34.

**இடம் :** காட்டுக்குடில்.

**நேரம் :** அதிகாலை.

[நெற்குன்றவாணர், சுந்தரசோழன், மல்லிகை மூவரும் கதையை முடிக்கிறார்கள், கண்ணீரோடு! குலோத்துங்க சோழனும் அஞ்சிலஞ்சியாரும் உள்ளே ஓடி வருகிறார்கள். நெற்குன்றவாணரைக் கட்டிக்கொள்கிறார்கள். சுந்தரசோழனும் மல்லிகையும் குலோத்துங்கனை வணங்கி எழுகிறார்கள்.]

**குலோ :** எல்லோரும் என்னை மன்னித்துவிடுங்கள்! நான் தவறிழைத்தவன்! வாணரே! ஏகம்பவாணர் இறந்துவிட்டார்! கூத்தன் ரத்தத்தை எற்றி, அவரைக் கொன்றுவிட்டான்!..............எல்லாம் என்னால்! நாடு என்னை மன்னிக்கட்டும்! நாடு என்னை மன்னிக்கட்டும்!! நீங்கள் எல்லோரும் நகருக்கு வாருங்கள்! எனக்கு அமைதி தாருங்கள்!

[நெற்குன்றவாணர் சுந்தரசோழனையும் மல்லிகையையும் பார்க்க, அவர்கள் சம்மதம் தெரிவித்தல். எல்லோரும் நகருக்குப் புறப்படுகிறார்கள்.]

வாழ்க தமிழ்! வணக்கம்!

( முற்றிற்று )


புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன் எம். எல். ஏ.
எழுதும்
திருக்குறள் புது உரை
தேன் துளிகள்
5-11-55ம் தேதிய இதழில்
ஆரம்பமாகிறது

மாநில மாநாட்டு
நிதிக் கூட்டம்
◉
கோகலே மன்றத்தில்
16-10-55 ஞாயிறு
காலை 9 மணிக்கு
தலைவர் :
தோழர் அ. பொ. அரசு
பேசுபவர் :
தோழர் A.V.P. ஆசைத்தம்பி
நன்கோடை அணா 8, 4.

தயாராகிறது!
சிந்தனைச்சிற்பி
சி. பி. சிற்றரசு எழுதிய
'விடுதலை நாட்டு
வீர மங்கை'
வெளியிடுவோர் :-
பைந்தமிழ்ப் பண்ணை
குளித்தலை - திருச்சி மாவட்டம்



## களம் : 32

காட்சி : 32

இடம் : இசைமண்டபம்

நேரம் : காலை

[குலோத்துங்கன் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான். சுற்றிலும் எல்லாப் புலவர்களும் அமர்ந்திருக்கிறார்கள். அம்பிகாபதி கொண்டுவரப்படுகிறான். அவனது கைவிலங்கு கழற்றப் பெறுகிறது. அரங்கமேடையில் அமர்கிறான் அம்பிகாபதி. பேரின்பப் பாடல்கள் பாடத் துவங்குகிறான். (அவன் பாடியதாகக் குறிப்பிடப்படும் பாடல்கள் 99 எதுவும் இதுவரை கிடைக்கவில்லை-ஆ-ர்) முதலில் பாயிரம் பாடுகிறான். அப்போது, மாடி பலகணியிலே உட்கார்ந்தபடி, தன் காதலன் வென்றுவிடுவான் என்ற நம்பிக்கையில் நூறு மலர்களைக் கொண்டு பாடல்களை எண்ண ஆரம்பிக்கிறாள் அமராவதி. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு மலர் எடுத்து இன்னொரு கூடையில் போடுகிறாள். பாயிரத்தையும் பாட்டாக எண்ணி ஒரு மலரைப் போட்டுவிடுகிறாள். அதனால் அம்பிகாபதி தொன்னூற்றொன்பதாவது பாட்டுப் பாடும்போது, நூறு பாட்டுக்கள் முடிந்ததாக கணக்கை முடித்துவிடுகிறாள். எண்ணமலேயே பாடி வந்த அம்பிகாபதி, பலகணியைப் பார்த்தபடி இருக்கிறான். நூறு பாடல்கள் முடிந்துவிட்டதாக நினைத்து, ஆனந்தத்தோடு, இடுப்பு வரைக்கும் தெரியும்படி எழுந்து பார்க்கிறாள் அமராவதி. அதனால், தான் வெற்றி பெற்றுவிட்டதாகத் தப்புக் கணக்குப் போட்ட அம்பிகாபதி, கட்டளைக்காகப் பாடிய பேரின்பப் பாடல்களை ஒதுக்கிவிட்டு, சிற்றின்பப் பாடலைப் பாடுகிறான். அதுவும், அமராவதியை ரசித்தபடியே பாடுகிறான்.]



**அம் :** (பாடுதல்)

சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடந்
துற்றே யசையக் குழையூச லாடத்துவர் கொள்செவ்வாய்
நற்றே னொழுக நடனசிங் கார நடையழகின்
பொற்றே ரிருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே.

[கூத்தன் ஆத்திரமாகக் குலோத்துங்கனைப் பார்க்கிறான். இவ்வளவு நேரமும் பாடல்களை எண்ணிக்கொண்டு வந்த வாணியன் தாதன்...]

**வாணி :** (எழுந்து) தொன்னூற்றொன்பதுதான் முடிந்தது, பேரின்பம் !

**கூத் :** சிற்றின்பம் தொடங்கிவிட்டான் சீர்கெட்டவன் !

**குலோ :** குற்றவாளி என்பது நிருபணமாகிவிட்டது !

[அமராவதி திகைத்தல். அம்பிகாபதி திடுக்கிடல்.]

**குலோ :** கம்பரே ! உமது வேண்டுகோளுக் கிணங்கினேன், வேதனையைத் தீர்க்க ! தாண்டிவிட்டான் பேரின்ப எல்லையை ! தடுக்கி விழுந்தான் சிற்றின்பச் சேற்றில்! இனி, என்னாலே ஆவதொன்றுமில்லை ! யாரங்கே ! அம்பிகாபதியைக் கொலைக்களத்துக்கு இழுத்துச் செல்லுங்கள் !

**ஏகம்பவாணர் :** (எழுந்து) குலோத்துங்கா !

[குலோத்துங்கன் திரும்பிப் பார்த்தல்.]

கொலைக்களத்தை அருகில் வைத்துக்கொண்டுதான் உன் அரச தர்மம் இயங்க வேண்டுமா ? குற்றவாளிக்கு வேறு தண்டனை கிடையாதா ?



**குலோ :** இருக்கிறது, குற்றம் சிறியதாக இருந்தால் ! அம்பிகாபதி சோழ வம்சத்திற்கு ஏற்படுத்திய மாசு துடைபடாது, காலம் உள்ளவரை ! ஆனால், அதற்கு நான் தேடிக் கொள்ளும் இந்தப் பரிகாரம், மானம் உள்ளவன் குலோத்துங்கன் என்கிற அளவிலாவது மக்களிடையிலே என் பேரை நிலை நிறுத்தும் !

**ஏக :** குலோத்துங்கா ! சோழமண்டலத்தைக் கட்டியாளும் நீ, இப்படிக் கடுகளவு மதிகூட இல்லாதிருப்பாய் என்று நான் கருதியதில்லை ! காதலித்தான் மகளை என்பதால், மானம் போய்விட்டது என்று கருதுகிறாய் ! அந்த அளவிற்கு உன் கண்களைக் கட்டிவிட்டார்கள் கயவர்கள் ! அறிவைத் துலக்கிக்கொண்டு ஆராய்ந்து பார் ! அரசன் என்பதாலே எந்த முடிவும் எடுத்துவிடமுடியும் என்று நம்பாதே! உன்னால் கொல்லப்படப் போகிறவன் எதிர்காலச் சந்ததியை ஏத்திப் பாடப்போகும் ஒரு மாபெரும் புலவன் ! புலவர்களை வாழ்விக்க வாரி வாரி வழங்கி, ஆரை நகரையும் நாட்டையும் இழந்தேன். காரணம், புலவர்கள்மீது எனக்குள்ள பற்றும் பாசமும்! அந்தப் பாசத்தை முன்னால் வைத்துக் கேட்கிறேன், கொலையை நிறுத்து ! வேறு தண்டனை கொடு !

**குலோ :** முடியாது ! நீதி, நீதியாகத்தான் இயங்கவேண்டும் !

**ஏக :** நீதி ! உன் குடும்பத்திற்குத் தனி நீதியா ?

**குலோ :** ஆம் ! அப்படியே இருந்தாலும், அதுவும் நாட்டிற்குத் தேவையான நீதிதான் ! ஏகம்பவாணரே! இனி எதுவும் என் காதில் ஏறாது! இதன் விளைவு எதுவானாலும் கவலையில்லை! தண்டனையை நான் நிறை வேற்றத்தான் போகிறேன்!

**ஏக :** (ஆத்திரமாக) குலோத்துங்கா ! மதியிழந்தவனே ! இறுதியாகக் கேட்கிறேன், கொலைகாரனாகத்தான் போகிறாயா?

**குலோ :** மீண்டுமென்ன கேள்வி ? முதலிற் சொன்னதுதான் ! முடிந்த முடிபும் அதுதான் !

**ஏக :** அம்பிகாபதி கொலையிலேதான் உனக்கு அமைதி கிடைக்குமென்றால், அந்த அமைதியே உலகில் இல்லாது அழிந்துபோகட்டும் ! அரசகுலம் மடிந்து போகட்டும்! சோழப் பேரரசைக் கடல் கொள்ளட்டும் ! நாடு, நகரம்-என் இந்த உலகமே தீயின் வாய்ப்படட்டும் ! குலோத்துங்கா ! கொலைகாரா !

**குலோ :** நிறுத்தும் ! நட்போ, உறவோ எந்த உரிமையும் இந்த அளவிற்கு நாவை நீள வைக்கக்கூடாது ! (சேவகர்களைப் பார்த்து) உம் ! இழுத்துச்செல்லுங்கள் கொலைக் களத்திற்கு !

**கம் :** (கண்ணீர் விட்டு) குலோத்துங்கா !

**குலோ :** தேவையில்லை !

[என்று கூறிவிட்டு எழுந்து சென்றுவிடுகிறான், ஏகம்பவாணர் முதிர்ச்சியின் நடுக்கத்தோடு துடித்துக்கொண்டிருக்கிறார். கூத்தனும் வாணியன் தாதனும் அவரைக் கடந்து போகும்போது, 'பளீர்' என்று கூத்தனை அறைகிறார். கூத்தன் கன்னத்தைத் துடைத்தவாறு வெளியேறுகிறான்.]

—காட்சி முடிவு—

(5-ம் பக்கம் பார்க்க)

# வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

வெளியிலிருந்து வந்த அந்தச் சத்தம் 'லாலி சுபலாலி, காதலர் ஜாலி மிகஜாலி' என்கிற பாட்டு உருவத்திலே அவர்களைத் தாக்கிற்று. இந்திராவின் உறவினர்களும் திருமண மானவர்களுமான சில குறும்புக்காரப் பெண்கள், அந்தப் பாட்டைப் பாடிஆடினார்கள். பாலனுக்கும் இந்திராவுக்கும் அவர்கள் பக்கத்தில் நின்று பாடுவது போலக் கேட்டது. மாடிப் படியிலேயே அந்தப் பெண்கள் அவ்வளவு குறும்பு செய்து கொண்டிருந்தார்கள். ஒரு குறும்புக்காரி 'இந்திராவின் முதல் முழக்கம் வாழ்க' என்று சப்தம் கொடுத்தாள். எல்லாப் பெண்களும் 'வாழ்க வாழ்க' என்றார்கள். பஞ்சணையில் உட்கார்ந்திருந்த பாலன், அந்தச் சப்தத்தைக் கேட்டுச் சிரித்தபடி, காலடியில் கிடந்த இந்திராவை, கையணைவாக எழுப்பித் தன்னோடு உட்கார வைத்தான். வெளியிலே பாட்டுப் பாடி கும்மாளம் அடித்த பெண்களை ஒரு குரல் அடக்கிற்று.

"அடி சீதா! ராஜம்! என்னடி அங்கே கூத்து! இறங்கி வாங்கடி கீழே! அதுக சின்னஞ் சிறுசுக, அப்படி இப்படி இருக்குங்க. அதை யேண்டி நீங்க போயிப் பார்க்கிறிங்க? நீங்களும் கலியாணமான புதுசிலே அப்படித்தான் இருந்திருப்பீங்க; பேசாமெ போய்ச் சாப்பிடுங்கடி!" என்ற அந்தக் குரல் பாலனின் தாயாரான மீனாட்சியின் குரலாக இருந்தது. குறும்புக்காரப் பெண்கள் கல கலவெனச் சிரித்தபடி கீழே இறங்கி ஓடி, பந்தியிலே உட்கார்ந்தார்கள். சாப்பிடும்போதுகூட ஒருவருக்கொருவர் இதே பேச்சாகப் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் கல்யாண வீட்டிற்குக் களை உண்டாக்கிக்கொண்டிருந்தார்கள்.

தனியறைக்குள் பாலன் கட்டிலில் சாய்ந்தபடி, இந்திராவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அழகியல்ல என்கிற எண்ணத்தை. அந்தப் பார்வையின் மூலம் முழுக்கத் திருத்தி அமைத்துவிட முயற்சித்தான். மெதுவாக அவளது கரத்தைப் பற்றினான். இந்திரா மெய்சிலிர்த்தவாறு அவனருகில் தள்ளி உட்கார்ந்தாள்.

"இந்திரா, நீ அழகாய் இல்லையே என்பது என் குறையல்ல; அழகைக் காட்டி ஏமாற்றுகிறார்களே என்பது தான் என் வருத்தம். ஆனாலும், நான் உன்னை விரும்புகிறேன். குயில்கூடத்தான் அழகாயில்லை. குரலை வெறுக்கிறோமா? நான் உன்னை என் குயிலாகக் கருதுகிறேன்" என்று கூறியபடி, அவள் முகத்தைப் பார்த்தான். அப்போது அதிலே ஏற்பட்ட மலர்ச்சியைக் கண்டதும் தனது கவிதா ரசனைமிக்க உவமை தன் மனைவியின் முகத்தை அழகு படுத்தி விட்டதாக எண்ணி, தானும் மகிழ்ந்து கொண்டான்.

"உன் நிலப்பூவிழியும் நிழல்படிந்த கூந்தலும், செங்கனி வாயிதழும், சிங்காரப் பற்களும் என்னை இன்பமயமான ஒரு உலகிற்குத் தூக்கிச் செல்லுகின்றன. சித்திரப் பாவையே, உன் மெய்த்திறன் கண்டு வியந்தேன்........."– பாலன் இப்படியே தொடருவான் போலிருந்தது. இந்திரா தன் கைகளால் அவன் வாயை மூடினாள். எழுத்தாளன் என்போன் பாதிப் பைத்தியம்: சாப்பிடுவதையும் தூங்குவதையும் தவிர வேறு நிகழ்ச்சிகளில் சராசரி உலகத்திற்கும் தனக்கும் சம்பந்தமில்லையென்று அவன் கருதுகிறான். பாலனும் அந்த மாதிரிப் பைத்தியம்தான் என்று இந்திரா நினைக்கவில்லை. தன்மீது அவனுக்கு ஏற்பட்டுவிட்ட மயக்கத்தினால்தான் அவ்வாறு பேசுகிறான் என்று கருதினாள். பாலன் தன் உதட்டிலிருந்த அவளது கைகளை எடுத்துவிட்டு முத்தமிட்டான்.

பொழுது விடிகிறவரை அவர்கள் இருவரும் தூங்கவே இல்லை.

## 5

## ஊர் திரும்பு படலம்

"பொட்டு வச்சுப் பூமுடிச்சு
பொறந்தயெடத்தை விட்டு
கட்டுக் கழுத்தி
ஏங் கனசமத்துக்காரி
காலெடுத்து வச்சாளே"
—செட்டிநாட்டு வரிசை.

பெற்று வளர்த்து, பெயர்சூட்டி, கண்போலக் காத்த மகளை

3

கணவன் வீட்டுக்கு அனுப்பப் போகிற நினைவில், கவலையோடுஅங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்தாள் மங்கையர்க்கரசி. சின்னப்ப பிள்ளையோ, சடங்காகி நான்கைந்து ஆண்டுகள் வரை தன் வீட்டிலேயே இருந்த மகள் கணவன் வீடு செல்லப் போகிற பெருமையை எண்ணி, பூரித்துப் போயிருந்தார். சுந்தரத்திற்கும் அது மகிழ்ச்சியாகத்தானிருந்தது. அன்றைக்கு அதிகாலையிலேயே எழுந்துவிட்டான். புதிதாகத் தைத்து வைத்திருந்த சட்டையையும், வேட்டியையும் பிரித்துப் பிரித்துப் பார்த்து அணிந்து கொண்டான். கமலம், மிக அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு, அக்காளை வழியனுப்புகிற வேகத்தில் குதித்துக் கொண்டிருந்தாளென்றாலும், இவ்வளவு நாளும் ஒரே வீட்டிலில் உண்டு, ஒரே படுக்கையில் உறங்கி ஒன்றாக வளர்ந்த தன் சகோதரி போகப் போகிறாளே என்ற கவலை, அவள் நெஞ்சைக் குத்திக்கொண்டிருந்தது. எப்பொழுதுமே இந்திரா தன் தங்கையின் அருகிலேயே தூங்குபவள். இரவிலே கமலம் கனவு கண்டு வாய் பிதற்றும் போதுகூட, இந்திராதான் அவளைத் தட்டியெழுப்பி பழையபடியும் தூங்கவைப்பாள். தலையணையை விட்டு விட்டு கொஞ்சம் தள்ளிப்போய் தூங்கிக் கொண்டிருக்கும் கமலத்தை, நள்ளிரவிலே எழுப்பி தலையணையில் தலையை வைத்துப் படுக்கச் சொல்லுகிற அளவுக்கு, தாய் குழந்தையைப் பார்ப்பதுபோல் இந்திரா கமலத்தைப் பார்த்துக் கொள்வாள். காலையில் முன்கூட்டியே எழுந்து நீராகாரத்தில் உப்புப் போட்டு, அதைக் கையில் வைத்தபடியே தட்டியெழுப்பிக் கொடுப்பாள் இந்திரா. தன்னைக் காட்டிலும் தங்கை அழகாயிருப்பதிலே மூத்தவளுக்கு நியாயமாக எழக்கூடிய பொறாமை இராமல், பெருமை கொள்பவள் இந்திரா. அடிக்கடி கமலத்தைச் சிவிச் சிங்காரித்து விட்டு திருஷ்டி கழிப்பாள். தங்கை, தன்னைப்போல் அழகற்றவளாயிராமல் ரத்தினக் கிரீடம்போல் ஒளிவீசுவதிலே அவளுக்கு அலாதி மகிழ்ச்சி. அந்த அன்பு இதயத்தின் திறந்த கதவுகளுக்கிடையே, பல காலம் வாழ்ந்தவளாகையால், தான் குடியிருந்த மாளிகை வெளியேறப் போகிறதே என்கிற கவலை, கமலத்தின் நெஞ்சத்தை அழுத்தியது. அடிக்கடி இந்திராவின் அருகிலே வருவதும், அவளது கூந்தலைச் சரிப்படுத்திவிடுவதும், பூச்சூடிவிடுவதும், பொட்டு வைப்பதும், கண்ணாடியைக் கொண்டுவந்து காட்டுவதுமாக, அன்று தன் மாறாத அன்பை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள் கமலம்.

"அக்கா, உங்க மாமியார் வீடு பெரிய வீடாமா? கேட்டியா?"

"அத்தான் அங்கே போனதும் பட்டணத்துக்கு போயிடுவாரா? ரெண்டு மூனு மாசம் லீவு எடுத்திருக்கிறதா அத்தை சொன்னாங்களே!"

"அந்தக் கொரநாட்டுப் புடவையையும், காஞ்சீபுரம் கண்டாங்கியையும் உன் பெட்டிக்குள்ளே எடுத்து வச்சிருக்கேன். ரேடியோ வளையலையும் நீ எடுத்துக்கிட்டுப் போ!"

--என்று ஒவ்வொன்றாக நினைவு படுத்திக்கொண்டு ஓடி ஓடி வந்து சொல்லுவாள். போகப்போகிறாள் சகோதரி, போவதற்குள்ளே எல்லாவற்றையும் பேசி முடித்துவிட வேண்டும் என்பதுபோலக் காணப்பட்டது அவள் நடந்து கொண்ட விதம். பக்கத்து வீட்டுப் பஞ்சாமிர்தத்தம்மாள் அடிக்கடி தங்கள் வீட்டுக்குள் வந்து போய்க்கொண்டிருந்தது கமலத்தின் கோபத்தைக் கிளறிவிட்டது. ஊரிலே பஞ்சாமிர்தத்தம்மாளைத் தோசி என்றழைப்பார்கள். அந்தத் தோசி, தன் அக்காள் புறப்படும்போதும் எதிரே வந்து தொலைக்குமோ என்ற எண்ணத்தில், கமலம் தன் சலிப்பை வெளிப்படையாகவே காட்டிக்கொண்டாள். இந்திரா, பஞ்சாமிர்தம் அந்தப் பக்கம் இல்லாத நேரம் பார்த்து, "போனால் போகிறதடி, பிரியப்பட்டுத்தானே வருகிறாள்? அவள் முகத்திற்கு எதிரே ஒன்றும் சொல்லிவிடாதே" என்றாள்.



அந்த இளகிய இதயம் கமலத்தின் கோபத்தைக் குறைத்தது.

"தங்கச்சி, அம்மாவை நல்லா பாத்துக்க. வெடுக்கு வெடுக்கினு அம்மா ஏதாவது சொன்னாக்கூட, பொறுத்துப் போய்க்க. அப்பா கூட அம்மா சண்டை போட்டான்னா, சாப்பிடாமக்கூட படுத்துக்குவா. அதெல்லாம் இல்லாமெ பாத்துக்க" என்று கமலத்தைப் பார்த்து இந்திரா சொன்னதும், கமலம் தன்னையும் அறியாமல் கண்ணீர் சிந்தினாள். குடு, குடுவென்று ஓடிவந்த மங்கையர்க்கரசி, இந்திராவைப் பார்த்துப் பரிவோடு, "காபி சாப்பிடு கண்ணு" என்று கூறிவிட்டு, அறைக்குள்ளே போய் குத்துவிளக்கிலே நிறைய எண்ணெய்யை ஊற்றிவிட்டு வெளியிலே வந்தாள். வந்ததும் அவள் கண்களிலே பட்டவள், பக்கத்து வீட்டுப் பஞ்சாமிர்தம். அவளைப் பார்த்ததும் மங்கையர்க்கரசி முகத்தைச் சுளித்துக்கொண்டு "பஞ்சாமிர்தம், நீ நாளைக்கு வா! பொண்ணெ வழியனுப்பப் போறோம்" என்றாள்.

பஞ்சாமிர்தத்திற்குச் 'சுருக்' கென்றது. 'போகிறேன்' என்று கூடச் சொல்லாமல் திரும்பிப் போய் விட்டாள். இந்திராவுக்கு அந்தக் காட்சி சங்கடமாயிருந்தது.

"ஏம்மா நேரேயே சொல்றே ?"

"போடி, உனக்கு ஒன்றும் தெரியாது: அவ கண்ணு பட்டா தங்கம்கூடக் கரியாயிவிடும். அப்பவே புடிச்சு, எதுக்கே எதுக்கே வந்துக்கிட்டிருக்கா" என்று கூறிவிட்டு, மங்கையர்க்கரசி வேறு பகுதிக்குப் பறந்தாள்.

சொக்கப்பர், சின்னப்பரை அருகில் வைத்துக் கொண்டு, தாங்கள் மருமகளை வைத்துக் கொள்ளப் போகிற விதம்பற்றியும், தங்கள் வீட்டிலிருக்கிற வசதிகள் பற்றியும், தெலுங்குப் படத்திற்குத் தமிழ் விளக்கம் கொடுப்பதுபோல் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர்கள் வீட்டிலே ஒரு பசு இருக்கிறதாம். அது காங்கேயம் ஜாதியாம். வேளை ஒன்றுக்கு பக்காப்படிக்கு இரண்டு படி பால் கறக்கிறதாம். பருத்திக் கொட்டை, புண்ணாக்கெல்லாம் அவர் தன் கையாலேயே அந்தப் பசுவுக்கு வைப்பாராம். பால், தயிர், மோர், நெய், எதற்கும் எப்போதும் குறைச்சலே இருக்காதாம். இரண்டு தோட்டக்காரர்கள்: மூன்று வேலைக்காரர்கள். ஒரு சமையல்காரன்: வேலைக்காரப் பெண்பிள்ளை. இப்படி எடுபிடி வேலைக்கும் ஏராளமான ஆட்கள் இருக்கிறார்களாம். இரண்டு வேலைக்காரர்களுக்குக் கூட, அவர் தான் திருமணம் செய்து வைத்தாராம்.

"இத்தனைக்கும் அவர்களுக்கு பத்து ரூபா தான் சம்பளம். கல்யாணத்திற்கு ஐநூறு, ஐநூறு ரூபா கொடுத்தேன். போருங்க, பொழைச்சுப் போகட்டுமே" என்று அவர் பெருமையாகச் சொன்னபோது, சின்னப்பர் கண்களை அகல விரித்து, ஒரு சங்கீதச் சிரிப்புச் சிரித்து "ஏதோ எம்பொண்ணு அதிர்ஷ்டக்காரி" என்றதன் மூலம், அவரது விளக்கத்தின் பின்பகுதியைத், தான் தொடர ஆரம்பித்தார். "இவ்வளவு நாளைக்கப்புறம் என் பொண்ணுக்கு நல்ல எடம் கெடச்சுப் போச்சு. இதுக்கு மேலே பெத்தவனுக்கு என்னங்க வேணும்! என்னவோ, இவ்வளவு நாளா எங்க விட்டிலேயே இருந்தது. அதுதான் சமைக்கும். 'அப்பா, அப்பான்னு' கூப்பிட்டு அது தான் சோறு போடும். அது வெண்டக்கா பச்சடி வைச்சதுன்னா, அதுக்காகவே நான் கொஞ்சம் கூடச் சாப்பிடுவேன். இப்பவே வீடு வெறிச்சுன்னு ஆகிப் போய்ட்டது போல காணுது எனக்கு" என்று கூறிவிட்டு, குழந்தைபோலத் தேம்பியழ ஆரம்பித்தார். சொக்கப்பரும் மேல்துண்டை எடுத்து அவர் கண்களைத்துடைத்தவாறு, நீங்க ஒன்னுக்கும் கவலைப்படாதீங்க. உங்க வீடு வேறெ, நம்ம வீடு வேறெயா? எங்க பொண்ணு மாதிரி கவனிச்சுக்கிறோம். நீங்க, வாங்க, இருங்க, வருஷக் கணக்கா நம்ம வீட்டிலேயே தங்குங்க. நமக்குள்ளே என்ன" என்று கூறிய ஆறுதல் மொழி, சின்னப்ப பிள்ளையை அமைதிப்படுத்திற்று. ஒரு பெருமூச்சு விட்டு நிம்மதியடைந்தார்.

உள்கட்டிலிருந்து, மங்கையர்க்கரசி, கையில் ஒரு வெள்ளிக் குவளை நிறைய காபியைக் கொண்டுவந்து, இந்திராவின் கையிலேகொடுத்து, "கொண்டு போயி உம் புருஷனுக்குக் குடும்மா!" என்றாள். அதை வாங்கிக் கொண்டு திண்ணைக்கு வந்தாள் இந்திரா. அங்கே, பாலன் ஒரு பெரிய தோல்பெட்டியோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தான். 'என்ன' என்று கேட்டாள் இந்திரா. "பெட்டி திறக்கவரல்லே. உள் பூட்டு விழுந்துக்கிடுச்சுன்னு நெனைக்கிறேன்" என்றான் பாலன். இந்திரா காபியைக் கீழே வைத்துவிட்டு, பாலனுக்கு ஒத்தாசை செய்ய ஆரம்பித்தாள். இருவரும் பக்கம் பக்கமாயிருந்து பெட்டியோடு சண்டை போடுவதைக் கண்ட சுந்தரம் கிண்டலாக, 'பெட்டி பத்திரம்' என்று சத்தம் கொடுத்தான். அது கேட்ட இந்திரா, நாணத்தால் முகம் சிவக்க, பெட்டியை விட்டு எழுந்து உள்ளே ஓடினாள்.

அவர்கள் புறப்படுவதற்காக நினைத்திருந்த நேரம் வந்தது. முறைப்படி, சின்னப்ப பிள்ளையும் குடும்பத்தினரும் பெண்ணோடு வந்து தங்கள் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கவேண்டுமென்று, சொக்கப்பர் அழைத்தார். அதை மறுத்துரைத்த படியே சின்னப்ப பிள்ளை அங்கு வந்த மங்கையர்க்கரசியைப் பார்த்தார். மங்கையர்க்கரசி முந்தானையைச் சரிப்படுத்திக் கொண்டு, சொக்கப்ப பிள்ளையைப் பார்த்து, "இல்லையண்ணா, அதுக்காகப் பரவாயில்லே. கூப்பிட்ட வரைக்கி சந்தோஷம். பொண்ணை அழைச்சுக்கிட்டுப் போங்க; நாங்க இன்னொரு நாளைக்கு வர்றோம்" என்றாள். வேகமாக வந்த மீனாட்சி, "நல்லாயிருக்குது ஞாயம்! பொண்ணழைச்ச வீட்டுக்கு நீங்க வரல்லையின்னா என்னயிருக்குது!" என்றாள். மங்கையர்க்கரசி வாய் திறப்பதற்குமுன்னாலே சுந்தரம் சிபாரிசுக்கு வந்தான். "ஆமாம்மா! நாமும் ரெண்டு நாளைக்கு அங்கே போய்ட்டுத்தான் வரணும். பொண்ணழைச்ச வீட்டுக்குப் போறது முறைதானே" என்று சட்டப்பூர்வமான வியாக்கியானம் கொடுத்தான்.

"சரிதாண்டா விருந்துக்குப் போறதுக்கு நீயும் அவுங்களோட சேந்துக்குறே" என்று மகிழ்ச்சிப் பெருக்கிலே மகனைக் கேலி செய்தாள் மங்கையர்க்கரசி.

"இனி அவன் உங்க புள்ளையில்லே! எங்க புள்ளே! அதனால் தான் கூப்பிடுறான்" என்று உரிமையோடும் பெருமையோடும் சொன்னார் சொக்கப்பர்.

"வச்சிக்கங்க. உங்களுக்கில்லாமையா?" என்று சிரித்தபடி அந்த வார்த்தைக்கு வரவேற்பு நிகழ்த்தினார் சின்னப்பர். இந்த நேரத்தில் பாலன் அந்தப் பக்கம் வரவும், மாப்பிள்ளைக்கு முன்னாலே மாமியார் நிற்கக் கூடாதென்ற முறைப்படி, மங்கையர்க்கரசி திரும்பி உட்கட்டுக்குச் சென்று விட்டாள். தானே தனியாக ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று ஆசைப்படும் சின்னப்ப பிள்ளை, தன் ஆயுட்காலத்திலேயே முதன் முறையாக அந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததைப் பயன்படுத்திக் கொண்டார். அதாவது, தாங்களும் பெண்ணழைத்த வீட்டிற்கு வருவதாகச் சம்மதம் கொடுத்தார்.

கமலம் 'விடு விடு'வென்று உள்ளே ஓடி, "அம்மா, அம்மா நாமும் பெண்ணழைச்ச வீட்டுக்குப் போறமாம்" என்றாள் உற்சாகமாக.

"சரிடீ. அதுக்காக நீ ஏன் குதிக்கிறே: சும்மாயிரு" என்று அவளை அடக்கிவிட்டு, பெண்ணழைத்த வீட்டிற்குப் புறப்படுவதற்காக தயார் செய்தபடி வேலைக்காரர்களுக்கு உத்தரவு போட ஆரம்பித்தாள் மங்கையர்க்கரசி.

பிறகு, பாலனையும் இந்திராவையும் சொக்கப்பரின் பழைய மாடல் ஆஸ்டின் காரில் உட்கார வைத்து, ஒரு சிறுமியையும் துணைக்கு வைத்தார்கள். தாங்களும் மூன்று வாடகைக் கார்கள் பிடித்து, அவற்றில் ஏறிக்கொண்டார்கள். கார்கள் புறப்பட்டன.

காரிலேயே, எழுத்தாளனுக்குள்ள இயற்கையான குணத்தின்படி, பாலன் இந்திராவிடம் சேட்டை செய்து கொண்டே வந்தான். அவளும் ஒவ்வொரு முறையும் பக்கத்தில் ஒரு சிறுமி உட்கார்ந்திருப்பதை நினைவு படுத்திக்கொண்டே வந்தாள்.

சுந்தரமும் நண்பர்களும் உட்கார்ந்திருந்த கார், முன்னாலே போய்க்கொண்டிருந்தது. நல்ல வேகத்தில் போய்க் கொண்டிருந்த அந்தக் கார் 'சடக்'கென ப்ரேக் போட்டு நிறுத்தப்பட்டது. எதிர்பாராத விதமாக நிறுத்தப்பட்டதால் பின்னால் வந்து கொண்டிருந்த--பாலன் இந்திரா உட்கார்ந்திருந்த கார்; அதிலே லேசாக மோதி ஒரு ஆட்டத்தோடு நின்றது. அந்த அதிர்ச்சியால் கூச்சலிட்ட இந்திரா, பாலனின் தோள்மீது சாய்ந்தாள். முன்காரிலிருந்த சுந்தரம் பளிச்சென இறங்கி முன்னால் ஓடிப் போய்ப் பார்த்தான். அங்கே அழகு வடியும் இளம் பாவையொருத்தி காருக்கு முன்னாலே விழுந்து கிடந்தாள்.

"தற்கொலை முயற்சி" என, சுந்தரத்தின் வாய் முணுமுணுத்தது.

தொடரும்

அடுத்தடுத்து
கண்ணதாசன்
எழுதும்
சிறு சிறு நாடகங்கள்

1. நந்தி நாயகம்
— நந்திக் கலம்பகம் —
2. சீவகன் காதல்
— சீவக சிந்தாமணி —
3. துறந்த மாதவி
— மணிமேகலை —
4. சக்களத்தி
— வளையாபதி —
5. உரைசால் பத்தினி
— சிலப்பதிகாரம் —
6. செத்ததற்குச் செத்தவள்
— சிலப்பதிகாரம் —
7. அந்தநாள் வந்திலீர்!
— குமணன் கதை —

# வாழ்வது எப்படியோ?

தென்னாட்டைக் காலடியிலே போட்டுக்கொண்டு, 'ஏக இந்தியா' என்ற ஏமாற்றுச் சொல்லின் பெயரால் வடநாடு மட்டும் எவ்வாறு பணத்தோட்டமாக்கப்பட்டு வருகிறது என்பதற்கு, அங்கே நிறுவப் வப்பட்டுள்ள பாங்கிகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள், ஆலைகள், இவைகளைச் சான்று காட்டினர். இப்போது உற்பத்தித் தொழிற் சாலைகள் பற்றி ஆராய்கிறர் சொற்செல்வர்.........

ஈ.வே.கி.சம்பத்

★

(10)

| பெயர். | மூலதனம். | நடத்தும் தொழில். |
|---|---|---|
| 14 F. sc. ஆஸ்னர் (இண்டியா). | 1,00,00,000 | மின்சாரப் பொறியியல் ஏஜன்சி, விநியோக வாணிபம். |
| 15 ஹிண்ட் சைகிள்ஸ். | 24,90,833 | சைகிள் வண்டி உற்பத்தி. |
| 16 ஹிண்டுஸ்தான் பைஸிகள் மானுபேக்சரிங் அண்டு இண்டஸ்டிரியல் கார்ப்பரேஷன். | 12,49,639 | சைகிள் வண்டி, அதன் துணைக்கருவிகள் உற்பத்தி. |
| 17 ஹிண்டுஸ்த்தான் மோட்டார்ஸ். | 4,96,12,650 | மோட்டார் கார்கள், டிரக்குகள், சேஸிஸ்கள் உற்பத்தி. "ஹிந்துஸ்தான் 14" எனும் கார் தயாரிப்பாளர்கள். |
| 18 ஹுக்ளி டாக்கிங் அண்டு எஞ்சினியரிங் கோ. | 12,50,000 | பொது பொறியியல், கப்பல் கட்டுதல். |
| 19 இண்டியா மெஷினரி co. | 25,08,170 | எடைபோடும் இயந்திரங்கள், அச்சு, பஞ்சாலை இயந்திரங்கள், மெஷின் டூல்ஸ் உற்பத்தி. |
| 20 இண்டியன் கால்வனைசிங் co. | 21,53,934 | பீப்பாய்கள், டாங்கிகள், சிலிண்டர்கள், உலோகத் தகடுகள், இரும்பு சன்னல்கள், கதவுகள் உற்பத்தி. |
| 21 இண்டியன் அயர்ன் அண்டு ஸ்டீல் co. | 7,88,32,480 | இரயில்வே ஸ்லீப்பர்கள், கேஸ்ட் அயர்ன் பைப்புகள், இரும்பு அச்சுகள் உற்பத்தி. |
| 22 இண்டியன் மேரியபின் கேஸ்டிங்ஸ். | 5,39,000 | வார்ப்படங்கள். |
| 23 இண்டியன் ஸ்டேண்டர்டு வேகன் co. | 30,10,700 | இரயில்வே கேபேஜுகள் வேகன்கள், வண்டிகள், டிரக்குகள், வாகனங்கள், இரயில்வே எஞ்ஜின்கள், ஆகியவை உற்பத்தி. |
| 24 இண்டியன் ஸ்டீல் and ஒயர் ப்ராடக்ட்ஸ். | 22,26,580 | ஒயர்கள், எஃகுக் கம்பிகள், ஆணிகள், போல்ட்டுகள், நட்டுகள், டெலிபோன் ஒயர்கள் உற்பத்தி. |
| 25 ஜெயப்பூர் மெடல்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ். | 21,32,300 | பித்தளை, தாம்பரம் ஆகியவைகளிலிருந்தும் கம்பியிழுத்தல் மின்சார மீட்டர்கள் உற்பத்தி. |
| 26 ஜேம்ஸ் அலக்ஸாண்டர் அண்ட் அண்டு co. | 10,00,000 | கட்டிட, இயந்திர பொறியியல், பாலங்கள், எஃகுப் புகைப்போக்கிகள், எஃகு வேலி, சுரங்க இயந்திரங்கள், பஞ்சு, சணல், சர்க்கரை ஆலை இயந்திரங்கள் அமைத்தல். |
| 27 ஜேய் எஞ்சினீயரிங் ஒர்க்ஸ். | 20,25,000 | உஷா தையல் இயந்திரத் தயாரிப்பு, உஷா மின்சார விசிறிகள், ஜோதி அரிக்கன் விளக்குகள், உஷா எனுமல் வர்ணங்கள், வார்னிஷ்கள், ஆகியவை உற்பத்தி. |
| 28 ஜெஸ்ஸாப் அண்டு co. | 61,00,000 | கட்டிட இயந்திர, மின்சாரப் பொறியியல்; வாகன்கள், கிரேன்கள் உற்பத்தி. |
| 29 ஜாஸ்ட்ஸ் எஞ்சினீயரிங் co. | 6,00,000 | மின்சார, இயந்திரப்பொறியியல். |
| 30 காமனி எஞ்சினீயரிங் கார்பரேஷன். | 59,96,250 | டூல்ஸ், இயந்திர மராமத்துச் சாதனங்கள், விவசாய சாதனங்கள், எனமல் பொருள்கள், முதலியவை உற்பத்தி. |
| 31 காமனி மெட்டல்ஸ் அண்டு அல்லாய்ஸ். | 40,00,000 | வெண்கலம், பித்தளை, தாம்பரம், ஈயம், துத்தநாகம், அலுமினியம் ஆகியவைகளிலிருந்து தகடுகள் அடித்தல், கம்பிகளிழுத்தல். |
| 32 கிரிலோஸ்கர் பிரதர்ஸ். | 22,96,142 | எஃகு பர்னிச்சர், தண்ணீர் பம்புகள், கரும்பாலை, விவசாய சாதனங்கள். |
| 33 கிரிலோஸ்கர் எலக்ட்ரிக் co. | 22,51,250 | மின்சார மோட்டார்கள் உற்பத்தி, டிரான்ஸ்பார்மர்கள் தயாரிப்பு. |
| 34 கிரிலோஸ்கர் ஆயில் எஞ்சின்ஸ். | 24,07,490 | ஆயில் எஞ்சின்கள் உற்பத்தி. |
| 35 குமார் தூபி எஞ்சினியரிங் ஒர்க்ஸ். | 27,30,000 | பாலங்கள், கயிற்றுப்பாதைகள் (Ropeways) பெரும் கட்டிட வேலைகள் முதலியவை. |
| 36 குஸூம் எஞ்சினியரிங் co. | 3,94,070 | பஞ்சாலை இயந்திரங்கள், சிறுடூல்கள், விஞ்ஞானத் தொழில் சாதனங்கள் முதலியவை உற்பத்தி. |
| 37 லார்சன் அண்டு டூப்ரோ. | 45,00,000 | காட்டர்பில்லர், டிராக்டர் முதலிய விவசாய, பொறியியல் சாதன ஏஜன்சிகள். |
| 38 மெஷினரி மேன்யுபேக்சரர்ஸ் கார்ப்பரேஷன். | 78,41,925 | பஞ்சாலை, சணல் சர்க்கரை காகிதம் சிமண்ட், முதலிய தொழில்களுக்கு வேண்டிய இயந்திரங்கள் உற்பத்தி. |
| 39 மார்ஷல் சன்ஸ் & Co. | 10,50,000 | விவசாயசாதன ஏஜன்சிகள், தேயிலை இயந்திரங்கள். |
| 40 மேச்வெல் எலக்ட்ரிகல்ஸ். | 10,17,450 | இயந்திர மின்சாரசாதனங்களுற்பத்தி; மின்சார விசிறிகள் தயாரிப்பு. |
| 41 மெக்கன்வலீஸ். | 22,00,000 | பாதைகள், இரும்புக் கூரைகள் அமைப்புகள்; பர்னிச்சர் தயாரிப்பு. |
| 42 நேஷனல் எக்கோ ரேடியோ & எஞ்சினீயரிங் Co. | 30,00,000 | ரேடியோ, ரேடியோகிராம்கள் உற்பத்தி. |
| 43 நேஷனல் எலக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ். | 10,79,075 | மின்சார டிரான்ஸ்பார்மர்கள், மோட்டார்கள் உற்பத்தி. |
| 44 நேஷனல் அயர்ன் & ஸ்டீல் Co. | 49,96,000 | எஃகுத் தகடுகள், ரங்கிள்கள், தண்டவாளங்கள், கம்பி ஆணிகள், நட் போல்ட்டுகள் முதலியவை உற்பத்தி. |
| 45 நேஷனல் மெஷினரி மேன்யுபேக்சரர்ஸ். | 2,46,31,900 | பஞ்சாலை இயந்திரங்கள் உற்பத்தி. |
| 46 நேஷனல் ரோலிங் & ஸ்டீல் ரோப்ஸ். | 15,00,000 | எஃகுக்கயிறுகள், கம்பிகள் உற்பத்தி. |
| 47 நேஷனல் ஸ்க்ரு & ஒயர் பிராடக்ட்ஸ். | 10,00,000 | திருகாணிகள், போல்ட் நட்டுகள், கம்பிகள் உற்பத்தி. |
| 48 பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ். | 2,16,72,500 | டாட்ஜ், கிரிஸலர், பியட் கார்களையும் இதர ட்ரக்குகள், லாரிகள் ஆகியவை தயாரிப்பு. |
| 49 பிரீமியர் கன்ஸ்ட்ரக்ஷன் Co. | 1,05,06,250 | கட்டிடங்கள், பாலங்கள் பொறியியல் இரயில்வே பாலங்கள், டன்னல்கள், காங்கிரீட் எஃகுக் குழாய்கள் உற்பத்தி, டீசல் இஞ்சின்கள் உற்பத்தி, மெஷின் டூல்ஸ் விவசாயச் சாதனங்கள் முதலியவை. |
| 50 சாரான் எஞ்சினீயரிங் Co. | 6,00,000 | சர்க்கரை ஆலை பொறியியல். |
| 51 சென்ராலே இண்டஸ்ட்ரீஸ் ஆப் இண்டியா. | 55,46,185 | ராலே, ரட்ஜ், ஹம்பர், ராபின் ஹுட் சைகிள்கள் தயாரிப்பு; சைகிள் துணைக் கருவிகள் உற்பத்தி. |

# இலக்கியத்தில் காதல்

காரை முத்துப்புலவர்

தலைவி யொருத்தி-பாண்டிய நாட்டுப் பைங்கிளி - அவள் பாண்டியன்மீதுகாதல்கொண்டு விட்டாள். காதல் என்றால் சாமான்யமா? தோளை மெலிய வைத்து, கைவளையைக் கழல வைத்து, மேனியைப் பசப்புறச் செய்து, தோற்றத்தையே மாற்றியமைத்துவிட்ட காதல்! எங்கெங்கு பார்த்தாலும் பாண்டியன்-சொல்லப் போனால் அவள் நெஞ்சமே பாண்டியனின் உருவம் கொண்டு விட்டது. ஆனால் அவளது தாயோ, காதற் படலத்தைக் கடந்து விட்ட மூதாட்டி. கடந்துவிட்ட காரணத்தாலோ என்னவோ, மகளைக் காதலிக்க விடாமல் தடுக்கும் பெருமாட்டி. "மீனுண் கொக்கின் தூவியன்ன" நரைத்த கூந்தல்; காலம் நடந்து போன பழம் பாதைச் சுவடுகள் போலத் திரை கொண்ட மேனி. கையிலிருக்கும் கோலுக்குத் தான் ஆதாரமா, தனக்குக் கைக்கோல் ஆதாரமா என்று தெரியாதவாறு, தானுடக்கோலாடத் தடுமாறும் முதியவள். தன் மகள் பாண்டியன்மீது காதல்கொண்டதை அறிந்தஅவள், அதைத் தடுக்கிறாள். "நீ, பாண்டியனைக் கண்ணால் காணவும் கூடாது" எனக் கட்டளை இடுகிறாள். இது தலைவிக்கு ஆத்திரத்தை உண்டாக்குகிறது. ஆத்திரம் வசை மாரியில் போய் முடிகிறதா? இல்லை; ஒரு சந்தேகமாக மாற்றங் கொள்கிறது. "காதலிக்கக் கூடாது" என்று தன்னைத் தன் தாய் தடுக்கிறாளே, ஏன்?" என்று சிந்திக்கிறாள். 'ஆழி அலை' கடந்து செல்ல முடிந்தாலும்; 'தோழி அலை' கடந்து செல்ல முடியாத அந்தத் தலைவி, தனக்கு மிகவும் வேண்டிய ஒரு தோழியைத் தன் பக்கத்தில் அழைக்கிறாள். "அடி தோழீ, பாண்டியன் மீது நான் காதல்கொள்ளக் கூடாது என்று என் தாய் தடுக்கிறாளே, ஏன்?" என்று கேட்கிறாள். தோழி யென்ன, காதல் கடலிலே நீச்சலடித்து, காதலைப் பற்றிய சகல தத்துவங்களையும் பிழிந்து எடுத்துக் கொண்டு வந்தவளா? அவள், பாவம்! புதுசு! 'அந்த' உலகத்தின், முதற் படியைக்கூட மிதிக்காதவள். ஏதோ, தனக்கும் ஒரு நாள் காதல் வரும் என்கிற அளவில் மட்டுமே காதலைப் பற்றித் தெரிந்தவள். இப்படிப்பட்ட ஒருத்தி, காதற் கதாநாயகிக்குத் தோழியாக இருக்கத் தகுதியற்றவள்தான். ஆனாலும் என்னவோ, அந்தத் தலைவிக்கு அவள் தோழியாக வந்து வாய்த்திருந்தாள். தோழி தலைவியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திகைக்கிறாள். "அன்னை ஏன் இவளைத் தடுக்க வேண்டும்?" என்று அவளும் சிந்திக்கிறாள். சேற்றிலே எறிந்த பந்துபோல் தலைவியின் கேள்வி தோழியிடம் கேள்வியாகவே தங்கிவிடவும் பதில் கிடைக்காமல் போகவும்—தலைவிக்குக்கோபம் வருகிறது. 'பட்'டென்றுதோழியின் தலையிலே ஒரு தட்டுத் தட்டிவிட்டு, "ஒரு வேளை இப்படி இருக்கலாமோ?" என்று சந்தேகத்திற்குக் கருப்பொருளும் திறந்து வைக்கிறாள். தோழி, கூர்ந்து கவனிக்கிறாள்.

"அடி தோழீ, வளைகள் அணியப் பெற்றனவாய், நீண்ட தோள்களையும் வாள் போன்ற கண்களையும் உடையவளே, ஒரு வேளை என் தாயார் குழந்தையாயிருந்து பருவப் பெண் ஆகாமல் ஒரே பாய்ச்சலில் கிழவியாகி விட்டிருப்பாளோ? இளமைப் பருவத்தின் துடிப்புகளை உணராத முதியவளாகவே அவளது வாழ்க்கை துவங்கியிருக்குமோ? இல்லை யென்றால் அவள் என் காதலைத் தடுப்பதற்கு நியாயமில்லையே! அவளும் ஒரு காலத்தில் என்னைப் போல் பருவப் பெண்ணாய் இருந்திருப்பாளானால், கூடற் பெருமானைக், கூடலார் கோமானை, கூடப் பெறுவோமா?" என்று துடித்திருக்க மாட்டாளா? நோக்கிய நோக்கிற்கு எதிர்நோக்கு நோக்கி, தாக்கிய பிற்பாடு தலை குனிந்து நின்று, "ஒரு வாக்கியம் சொல்லானா? நம் வாசல் முன் நில்லானா? நம்மை வளைத்தபடி செல்லானா? கன்னத்தைக் கிள்ளானா? கனி முத்தம் கொள்ளானா? கைதொட்டுப் பயிலானா, கலை கற்றுத் தாரானா?" என்று அல்லும் பகலும் அதுவே நினைவாய், கல்லும் கசிந்துருக, கனிந்துருகி நின்றிருக்க மாட்டாளா? அடி தோழீ! எனக்குப் புரிகிறது; என் அன்னை இளையளாய் மூத்தவளல்ல; முதியவளாகவே பிறந்தவள்" என்கிறாள் தலைவி.

அவள் காதலிப்பது எப்பேர்ப்பட்ட பாண்டியன்? அரும்பவிழ்த்த பூமாலையை உடையவன்! மாற்றாரைக் கொன்று, அவர்தம் நிலத்தைக் கைக்கொண்ட படைகளை உடையவன்! வீரம் கனல்கின்ற வேலை உடைவன்! அவனைக் கண்கொண்டு நோக்காதே என்கிறாளே அந்தப் பைத்தியக்காரக் கிழவி. சொல்லலாமா? அப்படிச் சொன்னதால் தானே ஒரு காலத்தில் தன் தாய் பருவப் பெண்ணாய் இருந்தது பற்றிக் கூடத் தலைவிக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

'கொடி பாடித் தேர் பாடிக் கொய்தண்டார் மாறன், முடி பாடி முத்தாரம் பாடி' சத்தான காதலிலே வாழ நினைத்த அந்தத் தமிழ்ப் பெருமாட்டி அதைத் தன் தாய் தடுக்கிறாள் என்ற உடனே, இவ்வளவு ஆழமான சந்தேகம் கொள்ளும் அற்புதமான கற்பனைச் செல்வம் முத்தொள்ளாயிரத்தில் காணப் படுவது அது இது:

வளையவாய் நீண்டதோள்
வாட்கணாய் அன்னை
இளையளாய் மூத்திலள்
கொல்லோ—தளையவிழ்தார்
மண்கொண்ட தானை
மறங்கனல்வேல் மாறனைக்
கண்கொண்டு நோக்கலென்
பாள்.

— 33 —

◉ ◉ ◉ ◉

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லப்படுமானால் அந்த வெறி திராவிட சமுதாயத்திலுள்ள எல்லோருக்கும் பிடிக்க வேண்டும் என்றுதான் முன்னேற்றக் கழகம் ஆசைப் படுகிறது. 'இல்லை இல்லை, அந்த வெறி வேண்டாம். பிரத்தியட்சக் கண்ணோட்ட வெறியே பிடிக்கட்டும்' என்று கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள். முதலில், இந்தப் பிரத்தியட்சக் கண்ணோட்டம் என்பதே சமுதாய விஷயத்தில் முழு மடத்தனமான கொள்கையாகும். இந்தக்

## முத்தோர் மொழி

ஒரு காலத்தில், மக்கள் என்ற சொல் கேலிக்குரியதாக இருந்தது. ஆனால், இன்று அந்தச் சொல், ஒரு புதிய சக்தி பெற்றதாக நாட்டில் விளங்குவதைக் காண்கிறோம்.

அந்தச் சொல், அந்த புதிய சக்தியைப் பெறுவதற்காக எத்தனையோ கஷ்டங்கள்-இடர்ப்பாடுகள்-இன்னல்களை எல்லாம் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பதை வரலாறு நெடுக படிந்துள்ள இரத்தக் கறை சொல்லும்.
—அறிஞர் அண்ணா.

கடுமையான வார்த்தையை நான் முழு நம்பிக்கையோடு உபயோகிக்கிறேன். 'இப்போது எனக்குப் பசி. சோறு போடு' எனக் கேட்கும் இந்தப் பி. கண்ணோட்டம் நிரந்தர நிம்மதிக்கு நிச்சயமாக வழிதேடாது. ஏதோ ஒரு நாட்டை மனதிலே வைத்துக்கொண்டு, இங்கே குடைபிடிப்பதும், கூத்தாடுவதும், கூலி பெறுவதும் கொள்கையாகக் கொண்டு, அந்த நாட்டை யோட்டியே இந்த நாட்டை ஆராய்கிறவர்கள். பச்சையாகச் சொல்வதானால் 'துரோகிகள்' என அழைக்கப்பட வேண்டியவர்கள்.

கம்பராமாயணத்திற்குள் இவர்கள் புகுந்ததே அந்த பக்தர்கள் நாலு பேராவது மதிக்கமாட்டார்களா என்ற நப்பாசையினால்தான். அதைத்தவிர இராமகாதையைப் பல காலம் ஆராய்ந்து, மார்க்சீயத் தத்துவத்தைக் கண்டுபிடித்து விட்டார்கள் இந்த மகாமேதாவிகள் என்பதல்ல பொருள். கம்பனைப் பற்றியும் பாரதியைப் பற்றியும் இவர்கள் கொடுக்கிற விளக்கங்கள் தி. மு. க.வின் 'வெறித் தத்துவ'த்திற்கு வேட்டுவைக்கின்றனவாம். துணிந்து கூறுகிறார் ஜனசக்தியார். இலக்கியத்தில் அநாவசியமாக இவர்கள் காலெடுத்து வைத்ததுதான் கம்யூனிசக் கோட்பாடுகளுக்கே வேடி வைத்து வருகிறது என்பதை இதன் மூலம் மறைக்க முயற்சிக்கிறார். இராவணன் முதலாளி, இராமன் தொழிலாளி, இதுதான் இராமாயணம் என்கிறாரா ஜனசக்தியார்? முதலாளி, தொழிலாளி தகராறுதானே அவர்களது மூலாதாரக் கொள்கை. எப்படி, எந்த ரூபத்தில், இராமாயணத்திலே இவர் புரட்சியைக் கண்டார், அந்தப் புரட்சி தி. மு. கழகத்தின் 'வெறித்தத்து'வத்தை அடக்கி நொறுக்கிவிட? நமக்குப் புரியவில்லை. காரணம், அவர் சொல்லவில்லை. கொங்கைக் குவியலும், மறைவிட மூட்டையும், வார்த்தை ஜாலமும், வர்ணனையும், கடவுளின் மனைவி கலவிப் போர் நிகழ்த்தியதும் தவிர, இராம காதை சொல்லும் உயர்ந்த பண்புகள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்ள நாம் ஆசைப்படுகிறோம், தேடிப் பார்த்தும்கிடைக்காததால். ஐந்தும், எட்டும், பத்தும், பதினெட்டும், என தமிழ்ப் பண்பு இலக்கியங்களைப் படித்துவிட்டு இராம காதையின் அருகிலே வரும்போது, கடுகளவு மனிதத் தன்மையை உடைய எவனும் களங்கம் நிறைந்த அந்தக் காவியத்தின் தன்மையை உணர்ந்து கொள்ள முடியுமே!

நிற்க, சென்னைக் கூட்டங்கள் பலவற்றில் கம்பராமாயணம்பற்றி தன்னோடு விவாதிக்க வரும்படி ஜீவா தி. மு. கழகத்தாரை அறை கூவி அழைத்தாராம். யாரும் வரவில்லையாம். எழுதுகிறார் ஜனசக்தியார்.

அடுத்த திங்கள் சென்னையிலே இலக்கிய விழா ஒன்று நடைபெற இருக்கிறதாம். அதற்கு கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து தோழர் ஜீவானந்தத்தை அழைக்கப் போகிறார்களாம். நம்மவர்களையும் அழைத்திருக்கிறார்கள். நட்பு முறையில் கம்பனையே பொருளாக்கிக் கொண்டு பேசினாலும் நன்றாகத்தானிருக்கும்.

## திருப்புத்தூரில்

◉

20-10-55 வியாழனன்று திருப்புத்தூரில் (இராமனாதபுர மாவட்டம்) மதுரை எஸ். முத்து அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா, அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசுவர். அதுபோது மாநில் மாநாட்டு நிதி அளிக்கப்படும்.

# மோதி உடையும் ....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசிகள் நிச்சயமாக ராம நாடகத்தில் சீதையின் கற்பு போலியானது என்றே நினைத்து ஐயுற்றனர்.

இதே ஐயம், உத்தரகாண்டத்தில் அயோத்தி மக்களின் வாயிலாக முகிழ்த்து வெளிக் கிளம்புவதைக் காண்கிறோம். அப்பொழுது சீதையைக் காட்டுக்கனுப்புவதைத் தவிர வேறொன்றும் இராமனால் செய்ய முடியவில்லை. அயோத்தி மக்களின் சந்தேகத்தை அவனால் எப்படித் தீர்க்க முடியும் !

இராமன் பரதனை நோக்கி, 'என்னைப் பற்றியும் சீதையைப் பற்றியும் நாட்டு மக்கள் எப்படிப் பேசிக் கொள்ளுகிறார்கள்' என்று கேட்டான், பரதனும் அண்ணன் கேட்டதற்கு மறு மொழியாக பொது மக்கள் பேசிக் கொண்டவற்றைச் சிறிதும் மறைக்காமல் சொல்லுகிறான்.

"அபாரமான சமுத்திரத்தில் ராமர் அணை கட்டினார்; இதுவரை எந்த அரசர்களாவது, தேவர்களாவது, அசுரர்களாவது அப்படிச் செய்ததுண்டா ? எண்ணிறந்த வானரர்களையும் கரடிகளையும், இராட்சதர்களையும் தன் வசப்படுத்தி சர்வலோக கண்டகனை இராவணனை புத்ரமித்ர பந்து பரிவாரங்களுடன் சம்கரித்தார.

"பிறகு, சீதையை இலங்கையிலிருந்து சிறை மீட்டு, இராவணன் அவளைத் தொட்டெடுத்தான் என்பதனையும் மறந்து, அயோத்திக்கு அழைத்து வந்து அந்தப் புரத்தில் வைத்துக் கொண்டிருக்கிறார்.

"இராவணன் அவளைப் பலாத்காரமாய்த் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு போனான்; அசோக வனத்தில் வைத்தான். அவனுடைய வசத்தில் அநேக மாதங்கள் இருந்த சீதையிடத்தில் இராமனுக்கு வெறுப்புண்டாகவில்லையே! அவளிடத்தில் அனுபவிக்கும் ஒரு சுகமும் சுகமா! நம்முடைய மனைவிமார்களும் இப்படிச் செய்தால் நாமும் இதைப் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியதுதான். அரசன் எப்படியோ குடிகளும் அப்படித்தான்"

{ சருக்கம் 43—
உத்தா காண்டம் வான்மீகி }

இவ்வாறு பரதன் கூறிய சொற்களை, ராமன் உண்மையானவை தானா என்று இராமன் அறிந்து கொள்ள விரும்புகிறான். பொது மக்கள் பேரால் தனக்கு ஏற்பட்ட ஐயத்தை பரதன் வெளியிட்டிருக்கலாம் அல்லவா ? மற்றவர்களையும் 'உண்மை தானா ?' என்று கேட்டான். அவர்களும் "ஸ்வாமிசொன்னதெல்லாம் உண்மைதான்" என்று கூறி விடுகிறார்கள்.

ஒரு பகைவன் வசம், பத்துத் திங்களுக்குமேல் இருந்து திரும்பிய பெண் எப்படித் தன் கற்பைக் காத்துக் கொண்டிருக்க முடியும் என்று அயோத்தி மக்கள் சிந்தித்தார்கள். சீதையை, உடையவன் ஏற்றுக் கொண்டாலும், ஊரார்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் பட்டத்தரசியை குற்றவாளி யென்றே தீர்மானித்தார்கள். இது போன்று எழுகின்ற சந்தேகங்களை எப்படித் தீர்க்க முடியும் !

சூரியன் சொன்னான், மகேந்திரன் சொன்னான் என்பதற்காக இராமன் சீதையை நம்பியிருக்கலாம்; ஏற்றுக் கொண்டிருக்கலாம். அயோத்தி மக்கள் அவ்வாறு எளிதில் நம்பத் தயாராக இல்லை. நாற்சந்திகளிலும் நின்று மறைவாகப் பேசுகின்றனர்,

மனித இனத்துக்கிடையிலே மனிதனாக வாழும் ராமன் மனிதப் பண்புகளுடைய ராமன், மனிதர்கள் நம்பும் முறையில் தானே சந்தேகத்தை விளக்க வேண்டும். மூட ஜனங்கள் இப்படிச் சொல்லுகிறார்களே என்று வேண்டுமானால் இராமன் கூறிக் கொள்ளலாம். அயோத்தி மூடர்கள் சொல்லுவதை 'அபாண்டமான பழி' என்று எப்படி மறுக்க முடியும் ?

சீதையிடம் ராமன் துய்க்கும் இன்பமும் ஒரு இன்பமா என்று அயோத்தி மக்கள் பேசிச் சிரிக்கிறார்கள். அவர்கள் குரலில் ஏளனம் துள்ளித் தெறிக்கிறது. அரண்மனை ரகசியம் அம்பலம் ஏறிச் சிரிக்கிறது.

நம்முடைய மனைவிமார்களும் இவ்வாறு ஒழுக்கக் கேடுற்றால் நாமும் இராம பிரானைப் போல் பொறுமையை மேற்கொள்ள வேண்டியதுதானே என்று அயோத்தி மக்கள் எவ்வளவுகுறும்பாகக் கேட்கிறார்கள் ! அடேயப்பா பொல்லாதவர்கள் !

முதலில் இராமனின் வாயிலாக முளைத்தெழுந்த 'சந்தேக புத்தி' அயோத்தி மக்களின் வழியாகக் முகிழ்த்துக் கிளைத்தது.

இவ்விரண்டு சார்பாக எழுந்த குரலுக்கு நாம்,சீதை என்னவிடை கூற முன் வருகிறாள் என்றுபார்க்க வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

# ஆசிரியத் தோழருக்கு

## பேதம் காட்டும் 'பேரியோரே'!

ஆசிரியர் அவர்களுக்கு.

நேரு விழா, தென்னகத்தில் கொண்டாடப்பட்டுவரும் பல திருவிழாக்கள் போல, நகர சபைத் தேர்தல் காலத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது! திருச்சி, சேலம், காரைக்கால் போன்ற பகுதிகளில் பண்டிதரின் பவனியில் குறிப்பிட்டதெல்லாம், நெஞ்சிலே புகைந்து கொண்டிருக்கும் எண்ணத்தின் வெளிப்படைதான். முன்னர் தென்னாட்டு பவனியின்போது குறிப்பிட்ட 'காரம்' இப்போது தணிந்திருக்கிறது. மருந்தில் வேகமில்லை.

இமயமலையினருகில் இருந்து வந்திருக்கின்றேன் என்பதால் எனக்கு மட்டும்சொந்தமல்லஇமயம், உங்களுக்குத்தான். வடக்கு தெற்கு எனப் பிரிவு படுத்திக் கொள்ளாது, குமரி முதல் இமயம்வரை ஒரே தேசத்தைச் சேர்ந்ததுதான் என எண்ணி, பிளவு மனப்பான்மையைவளர்க்காது, ஒற்றுமைப்பட்டு செயல் படுங்கள்என்று குறிப்பிட்டுதிராவிட இயக்கத்தின் பிரிவினைத் திட்டத்தால், மன துள்ளே தாக்கப்பட்ட காரணத்தால் பூசி மெழுக முயற்சித்திருக்கிறார் பூசுரர்.

தெற்கு வடக்கு பேதம் தீமை தரும், தீய கருத்தினரின் வெட்டிப் பேச்சு என்று விரவுரை பகன்றதாக கெக்கலிக்கும் பண்டிதரின் கண்ணைத் திறக்கும் முறையிலே 'தமிழ் நாடு' இதழ் 5-10-55ல் 'தமிழருக்கு இடமில்லை' என்ற துணைத் தலையங்கத்தில் இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பழம் பொருளாராய்ச்சி மத்திய ஆலோசனைக் குழுவில், ஒரு தமிழர்கூட இடம் பெறாதது வியப்பை அளிக்கிறது என வருந்தி எழுதியுள்ளது.

'தமிழ் நாடு' வருந்துகிறது. நேரு, வருந்தாதிர் வருந்துவது பேதப் படுத்தும் போங்காகும். எனக் கூறுகின்றார். அகில இந்திய நோக்கம் கொண்டுள்ளவர்கள் விந்தியத்திற்குத் தெற்கே சூன்யமாக்கி விடுவதன் காரணம் என்ன என பன்முறை வினவியுள்ளோம். தகுதியான பதில் தர நேருவால்கூட இயலாது.

இல்லாவிடின் பேச நேரிட்ட சந்தர்ப்பங்களிலே ஐந்தாண்டுத் திட்டத்தால் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்பது 'சுத்தஅபத்தம்' எனச்சொல்லத் தவறியிருக்க மாட்டார். அதனால் தான் கூறுகிறார் தெற்கு வடக்கு பேதம் வேண்டாம் என்று.

பல துறைகளிலே, வடக்கு, தெற்கை வாட்டி வதைக்கிறது என மறுக்க இயலாத புள்ளி விவரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. பண்டிதரின்பவனியை பிரசுரித்த அதே ஏடுதான் வடக்கின் படுபாதகச் செயல் பற்றித் துணைத் தலையங்கம் எழுதியுள்ளது.

பேதம் காட்டுவது யார் எனப் புரிந்து கொள்ளவில்லை நேரு. வரவேற்பும் வான வேடிக்கையும் கொட்டும் முரசும் கோலாகல வரவேற்பு என அவர் எண்ணியதைத் தூள் தூளாக்கும் முறையில்தான், "பாரீர் பண்டிதரே! தெற்கு வடக்கு பேதம் தீது என்கிறீரே. பாரும் வடக்கின் வக்கிர புத்தியை. பழம் பொருளாராய்ச்சி குழுவில்கூட ஒரு தமிழர் அங்கம் வகிக்க இயலவில்லையே! என்ன பதில் கூறுகிறீர்" என இடித்துக் காட்டுகிறது தமிழ் நாடு.

நாம் கேட்டால், பேதப் படுத்தும் பித்தர்கள் என நேரு பக்தர்கள் அலறுகின்றனர். 'தமிழ்நாடு' தரும் சூட்டிற்கு என்ன பதில் தர இருக்கின்றனர்.

அன்பன்,
**அட்சயன்,**
மதுரை.

◉

அன்புள்ள ஆசிரியருக்கு,

1—10—55 தென்றல் இதழில் ம. ரா. பூபதி எம். ஏ. அவர்கள் தீட்டிய "கலைச் சொற்கள்—கண்ணோட்டம்" என்ற கட்டுரை மிக நன்றாக அமைந்திருக்கிறது. சில ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் எழுத, பிறமொழிகளிலிருந்து சில எழுத்துக்கள் கடன் வாங்க வேண்டும் என்று கூறுகிறவர்களுக்கு விளக்கம் தரும் சிறந்த கட்டுரையாகும்.

நடைமுறையில் இருக்கும் ஆங்கிலச் சொற்களையும் அதற்குப் பொருத்தமான தமிழ் வார்த்தைகளையும் தென்றல் இதழிலே அதற்கென ஒரு பகுதி வெளியிட வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

" வேலங்குடித்திருவிழா "

தொடர்கதை படிக்க இனிமையாக இருக்கிறது. இம் முறையிலேயே கதை வளர வேண்டுமென்பது எனது அவா.

அன்பன்,
**தொண்டைமான்.**
கடம்பத்தூர்

# வெண்பாப் போட்டி

## 17. மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

வெண்பாப் போட்டி 17ன் பரிசுபெற்ற வெண்பாவையும் ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் வெளி யிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியிடப்படும்.

◉ மக்கள் குரல்கேளார் மண்டும் துயர்நோக்கார்
மக்கள் மொழிக்கேதும் வாய்திறவார்--அக்கொடியர்
பொய்மை அரசியலைப் போக்கப் புகும்படையில்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

வான்நிலவே தேன்தமிழே மாங்கனியே தீங்கரும்பே
கான்மயிலே கார்குழலே காற்சிலம்பே--நாண்மலரே
மெய்யழகு மேம்பாவாய் மென்கரத்தால் நீயணைத்தால்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ஆரூர். சிங்காரம். திருச்சி.

★

தொட்டு நலம்பாடத் தோகையவள் சம்மதித்தால்
விட்டுப் பெயர்வேனோ வேல்வரினும்--ஒட்பமெனக்
கொய்யா மலர்தீண்டிக் கள்முத்தம் ஈந்தவளின்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—அடைக்கலக்குளுளன், கோவிலூர்.

★

நாட்டுயர்வும் பண்பாடும் நந்தமிழைப் போற்றுநலக்
கூட்டுறவும் தத்தம் குறிக்கோளாய்க்--காட்டியிந்நாள்
வையமிசை வாழ வழிவகுப்பார் தம்மிடைநான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—தி. மு. சங்கரலிங்கம், திருவாமாத்தூர்.

★

எந்தை வளர்த்தமொழி ஏற்றமிகு பெற்றவர்கள்
சிந்தை தனில்சீராய் செய்தமொழி--பைந்தமிழை
செய்திடுவேன் பார்மொழியாய் அப்பணியில்
சாவையும்நான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—நா. செல்லையா, பாகனேரி.

★

வையத்தின் பேருணர்வே வாழ்வுக்கோர் புத்துயிரே
ஐயத்தை நீக்கும் அறிவொளியே--மெய்யன்பர்
உய்யத்தான் வந்துதித்த ஓங்குதமிழ்ச் செல்வியுனை
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ந. பிச்சைமுத்து, பாகனேரி.

★

முத்தே கரும்பே முதிர்ந்ததமிழ்த் தேனேநான்
பித்தே பிடித்தேன் பிரிவறியேன்--எத்தேயும்
பொய்யுரையேன் என்றுரைத்துப் போனஅத்தான்
வந்ததும்யான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—மாதையூரான், திருவாமாத்தூர்.

★

குணக்குன்றாய் நின்று குளிர்தமிழால் பேசி
மனவானில் தோன்றுமென் மாரா--உனைநினைந்து
நெய்போ லுருகி நிதம்குழையும் நானென்று
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன் ?

—ச. மா. அருணள், நடந்தை.

★

கட்டிக் கரும்பே ! கனிமொழியே ! என்றுரைத்துப்
பட்டன்ன மேனியொளிர் பாவையொடு--அட்டியின்றித்
தொய்யில் விளங்கும் துணைமுலைசேர் ஆகத்தில்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—தமிழ்நெஞ்சன், கரந்தை.

இன்மொழியின் செந்தமிழ்க்கு ஏற்றம்கொள் தெற்கிற்கு
இன்னலெனில் என்னவளே என்னைக்கேள்
--மின்னொளிக்குள்
கொய்திடுவேன் ; செந்நீரைக் கொட்டும்வாள் கண்டுந்தன்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ஏபி, ராமலிங்கம் பி.ஏ. வகுப்பு, திருச்சி.

★

வண்டமிழ்ப் பூங்காவில் வந்துதித்த மென்மலரே !
மண்டலத்தார் போற்றும் மணிவிளக்கே !--கண்ணழகி !
செய்தவத் தால்கிடைத்த செங்கரும்பே ! உன்னுடன்யான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—கே. சி. கஜேந்திரன், சென்னை-1.

★

கொஞ்சுமொழி பேசும் கொழுஞ்சுடரே ! என்னமுதே !
நெஞ்சத்தி லுள்ளஎழில் நேரிழையே !--விஞ்சுதடி
அள்ளி அணைத்திடுவேன் ஆரணங்கே உன்னுடலை
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ஆர். வடிவேல், பேரோடு.

★

நெஞ்ச நிறைகவர்ந்து நேரிழையே யான்வருவேன்
அஞ்சற்க என்றுரைத்த அத்தானின்--செஞ்சொலினி
உய்விக்கும் காதல் உயர்வெய்தும் வந்துற்றால்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—வி. ப. கோவிந்தசாமி, சென்னை-12.

★

பெற்று வளர்த்துப் பெரிதுமுனைப் பேணிவந்த
உற்றவர்தம் ஒப்புநலைப் பெற்றாயோ ?--கற்றவள்நீ !
பொய்யுந்தன் உள்ளத்தே பூக்காது என்றிடில்யான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

ஜெ. நாகராஜன், துறையூர்.

★

கார்மேகக் கூந்தலாய் ! கன்னல் மொழிப்பாவாய் !
சீர்மேவும் தென்னகத்துச் செங்கரும்பே !--பார்புகழ்
பைங்கிளியே ! நின்பவள வாயதரம் வைத்துநான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—சு கந்தசாமி, நாமக்கல்.

★

கண்ணாடிக் கன்னத்தில் முத்தமிடில் மென்கறையால்
புண்ணாகிப் போகுதத்தான் என்றொதுக்கும்--கண்மணியே
பொய்யூடல் கொள்ளேல் பணிந்திடுவேன் என்றணைத்து
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—வே. அர, சைலவாசன், வேலூர்.

★

கரவில் தமிழரினம் கண்விழித்துக் கொண்டே
நிரைநிரையாய்ப் போர்க்களத்தை நோக்கி--விரைந்தேகும்
செய்தியொன்று வந்தென் செவிபுகுமேல் சென்றதனில்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—தமிழ்வேள், வேலூர்.

★

உள்ளம் வருந்தி உடலும் துரும்பாக
வெள்ளம் பெருகும் விழிகளுடன்--ஒள்ளிழையாள்
துய்க்கும் பிரிவுத் துயரொழியச் சென்றவளை
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—கா. ச. மூர்த்தி, பழவூர்.

★

பச்சைப் பசுங்கிளியே பண்ணார் தமிழ்ச்சுவையே
இச்சைக் குகந்தபே ரின்பமே--நிச்சயமாய்க்
கைப்பிடித்தே உன்றன் கனியிதழ்த் தேனுண்டு
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ஆ. கோவிந்தராசன், குடந்தை.

★

திங்கள் கதிர்சரிக்க தென்றல் குளிர்பெருக்க
கங்குல் வரலாச்சு காதலரே !--மங்கையெனை
கைவிடுத்துப் போதலுற்றீர் கண்ணியமோ ?
என்றினிநான்
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன் ?

—பாபன், நாங்குனேரி.

★

பொக்கை வாய்திறந்து புரியா மொழிபேசி
எக்கணமும் இன்பம் எனக்கூட்டி--மிக்கூர்ந்து
கைநீட்டி நீயழைப்பாய் கட்டளையை மீறுது
மெய்சிலிர்க்கச் சேர்ந்துமகிழ் வேன்.

—ச. இராமசாமி, திருச்சேறை.

◉ பரிசு பெற்ற வெண்பா--பரிசு ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன். எ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை - 6.